
கவிஞர்

# ஐயாத்துரை கவிதைகள்




வெளியீடு:

யாழ். இலக்கிய வட்டம்

கவிஞர் ஐயாத்துரை
கவிதைகள்

# கவிஞர் ஐயாத்துரை
# கவிதைகள்

தொகுப்பு:

**ஐ. வரதராஜா**

யாழ். இலக்கியவட்ட வெளியீடு

நூல் : கவிஞர் ஐயாத்துரை கவிதைகள்
ஆக்கியவர் : மூதறிஞர், கவிஞர், வே. ஐயாத்துரை
59, கலைமகள் வீதி, அரியாலை
தொகுப்பும் பதிப்புரிமையும் : ஐ. வரதராஜா
முதற்பதிப்பு : டிசம்பர் 2001
வெளியீடு : யாழ் இலக்கியவட்டம், யாழ்ப்பாணம்.
அச்சுப்பதிப்பு : ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.
அட்டை : ரமணி
பக்கம் : (12 + 80) 92
விலை : 100/=

Iyadurai Kavithaikal
(Colection of Poems V. Iyadurai)
Copy right : I. Varatharajah. 59, Kalaimagal Road, Ariyalai
Edition : Frist Edition, December 2001
Publishd by : Yal Ilakkiya Vaddam
Printer : The Ananda Priting, Work, Jaffna
Cover Design : Ramani
Price : Rs.100/=

வடக்கு அபிவிருத்தி புனரமைப்பு புனர்வாழ்வு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகார அமைச்சு யாழ் இலக்கியவட்டத்திற்கு வழங்கிய எழுத்தாளர் ஊக்குவிப்பு நிதியில் இருந்து பெறப்பட்ட உதவி நிதியையும் பயன்படுத்தி இந்நூல் அச்சிடப்பட்டது.





## வாணி துதி

கைநிறைய மலர்கொண்டு பணிவே னம்மா
கருணை மலர்க் கண்கொண்டு காப்பா யம்மா
மெய் நெறிகொள் பாமாலை புனைவே னம்மா
மேவுகலா ஞானமருள் கண்பா ரம்மா
நெய்செறிவுத் தீபமலர் தொடுப்பே னம்மா
நினதருட்கண் பார்வைமலர் நிறைப்பா யம்மா
வையத்தில் அறிவுமலர் வாசம் வீச
வாணியெ நின் மலர்ப்பதத்தை வணங்கி னேனே.



# சமர்ப்பணம்

கூட்டுக் குடும்பமாய் வாழ்ந்து
குடும்ப சுமைகளைத் தாங்கி
எந்தையைக் கவிபாட வைத்த
பெரியப்பா, பெரியம்மா
நடராஜா – தங்கம்மா
அவர்களுக்கு
இந் நூல் சமர்ப்பணம்.



## முன்னுரை

தந்தையாரின் மூன்றாவது கவிதைத் தொகுதியும் யாழ் இலக்கிய வட்டத்தின் வெளியீடாக வருவதில் மகிழ்ச்சி கொள்கின்றோம். அமரராகிவிட்ட எழுத்தாளர்களின் ஆக்கங்கள் அவர்களை நினைவு கூர்ந்து வெளியிட்டு வைப்பது மிக அரிதாகவே நடைபெறுகின்றது. அவ்வகையில், யாழ் இலக்கிய வட்டமானது தந்தையாருக்குச் செய்யும் கௌரவமாகவும், அஞ்சலியாகவும், யாழ் இலக்கிய வட்ட மூத்த உறுப்பினராகிய அவரது கவிதைத் தொகுப்பினை வெளிக்கொணரச் செய்வது போற்றுதற்குரியதொன்றாகும்.

அண்மையில் நடைபெற்ற ஒரு நூல் வெளியீட்டு விழாவில் யாழ் இலக்கிய வட்டத்தலைவரும் பிரபல எழுத்தாளரும், எனது தந்தையாரின் அன்புக்குரியவருமாகிய கலாநிதி. க. குணராசா அவர்கள் யாழ். இலக்கிய வட்டத்திற்கு, அரசினால் புத்தக வெளியீட்டிற்கும், புத்தக கொள்வனவிற்கும் ஒரு தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அந்நிதியிலிருந்து வெளியிடப்படும் நூல்களில் கவிஞர் ஐயாத்துரை அவர்களின் கவிதைத் தொகுதியும் இடம்பெறுகின்றது எனவும் கூறினார். அன்றே இது தொடர்பாக வேண்டிய ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறும் என்னிடம் பணித்தார்.

1995, 2000ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இடப்பெயர்வின் போது முக்கியமான கவிதைகளடங்கிய தொகுப்புக்கள் மட்டும் எம்மால் எடுத்துச் செல்லப்பட்டு பாதுகாப்பதற்கு முடிந்தது. இதனால் இத்தொகுப்பிற்குள் அடங்கிய சில கவிதைகளை சிரமத்துடன் சேகரிக்க முடிந்தது இருப்பினும் எனது சகோதரன் குமரதாசன், மைத்துனர் சிவதாசன் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இந்நூலைத் தொகுத்துள்ளேன்.

இத்தொகுதி வெளிவருதற்கு உந்துசக்தியாக இருந்த கலாநிதி க. குணராசா அவர்கட்கும், தந்தையாரின் அபிலாசையைப் பூர்த்தி செய்யுமுகமாக அணிந்துரையை எழுதிய திரு. சொக்கன் அவர்கட்கும் அட்டைப் படத்தினை கருத்துற அமைத்த ஓவியர் ரமணி அவர்கட்கும், இக் கவிதைத் தொகுப்பிற்கு தொகுப்பில் உதவிய யோ. ஜெயஸ்ரீ (தமிழ் சிறப்புக் கலைமாணி) மற்றும் பிரதியாக்கம் செய்துதவிய சோ. லதா ஆகியோருக்கும் இந்நூலை அழகுற விரைந்து அச்சிட்டுத்தந்த ஆனந்தா அச்சகத்தினருக்கும் எனது நன்றியை தெரிவிக்கிறேன்.

இந்நூல் வடக்குக் கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்குக்கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் நிதிமூலத்தி லிருந்து வெளிவருவதனால் அவர்களுக்கும் எமது நன்றிகள். மீண்டும் இந்நூலை வெளியிடுவதில் ஆர்வம் காட்டி வெளியிட்டுள்ள யாழ் இலக்கிய வட்டத்தினருக்கு உளப்பூர்வமான நன்றி உரித்தாகும்.

59, கலைமகள் வீதி,<br>
அரியாலை, — *ஐயாத்துரை வரதராஜா*<br>
யாழப்பாணம்.



# அணிந்துரை

குகஸ்ரீ க. சொக்கலிங்கம் (சொக்கன்) எம். ஏ.

1966ஆம் ஆண்டு, மார்ச் 3ஆம் நாளன்று, நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய முன்றிலில் (இன்று நல்லூர் இந்து மகளிர் மகாவித்தியாலயம் எனப்பெயர் மாற்றம் பெற்றுள்ளது), நல்லூர் முற்போக்கு வாலிபர் முன்னணியினர் மகாகவி பாரதிக்கு விழா எடுத்தனர். அவ்விழாவில் 'தமிழ் வாழ வழி' என்ற தலையங்கத்திலே கவியரங்கம் ஒன்று இடம்பெற்றது. அதற்குத் தலைமைதாங்கும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டது. அமரர் மதுரகவி இ. நாகராசன் உட்பட ஐவர் கவிஞர் இக்கவியரங்கிலே பங்கு கொணடனர்.

இவர்களுள் புதியவர் ஒருவரும் இருந்தார். மெலிந்த உருவம், பொதுநிறம், விபூதிப்பூச்சும் சந்தனப்பொட்டும் மற்றைய கவிஞர்களிலிருந்து அவரை வேறுபடுத்திக் காட்டின. அது மட்டுமா? அவர் தமது கம்பீரமான இசைகனிந்த குரலில் 'கல்யாணி' என்று தொடங்கிப் பாடிய வாணிதோத்திரமும் அவருக்கு ஒரு தனிமுத்திரையை அளித்தது. கவியரங்கிலே கலந்து கொண்ட மற்றையோரிற் சிலர், தமது கவிதைகளைப் பாடியது உண்மைதான். ஆனால் புதியவரின் இசைக்கு முன் அவை எடுபடவில்லை. கவிதைப் பொருளிலே புதுமை அதிகம் இல்லாத போதும், தமது கவிதை முழுவதையும் கேட்போர் சுவைக்கும் வகையில் அவர் பாடி, அன்றே கவியரங்க நாயகராய்க் கொடிநாட்டினார் என்றே சொல்லவேண்டும்.

இந்தப் புதியவர் வேறு யாரும் அல்லர், அரியாலையூர்க் கவிஞர் வே. ஐயாத்துரையே அவர். ஏற்கெனவே, அந்நாளில் தங்களின் இசைநாடகங்கள் மூலம் இசை(புகழ்) போக்கிய நடிகமணி வைரமுத்து, செல்வம், இரத்தினம் போன்ற

பெருங்கலைஞர்களோடு ஈடுகொடுத்துப் பல பாத்திரங்கள் ஏற்றுப் பாடியும் நடித்தும் இசைநாடக உலகிலே தமக்கென ஒரு சிறப்பிடத்தைப் பெற்றிருந்த அவர், தாம் ஒரு கவிஞருமாவார் என்பதை இனங்காட்டிய கவியரங்கு அது. காலப்போக்கில் 'கவிஞர் ஐயாத்துரை ஏறாத கவியரங்கே இல்லை' என்னும் அளவிற்கு அத்துறையிலே அவர் தம்மை நிலை நிறுத்திக் கொண்டார்.

புரட்சியும் புதுமையும் சமூகசீர்திருத்த வீறும் மிக்க கவிஞர்கள் பலர் புயலெனச் சீறி, இடி எனமுழுங்கி, எள்ளல் நகைச்சுவை என்பவற்றை சில வேளைகளில் தேவைக்கும் அதிகமாக, விரசமாகக் கூடப் பயன்படுத்திக் கவியரங்குகளிலே மலிவான கைதட்டல்களையும் பாராட்டுக்களையும் தேடியது போன்ற குறுக்குவழியை என்றுமே நாடாத ஒருவர், கவிஞர் வே. ஐயாத்துரை என்பது எனது கணிப்பீடு.

'பல்லுயிரும் பலஉலகும் படைத்தழித்துத் துடைக்கினும்ஓர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்'

எந்தப் பெருமாற்றங்களினாலும் சலனிக்காது நல்லவற்றையே எப்பொழுதும் தமது கவிதைகளிலே எடுத்துரைத்து, சமூகத்திற்கு நல்ல அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் தம் கவிதைகள் மூலம் வாரி வழங்கிய நல்ல கவிஞர் அவர். இதனோடு கவிதையாற்றல் சிறந்த வல்லவராயும் அவர் விளங்கினார். இதனால், அவர் பெற்ற பரிசில்கள் பல, பாராட்டுக்களும் பல.

வடபகுதிக் கூட்டுறவுச்சபையின் 'ஐக்கியதீபம்' சஞ்சிகை நடத்திய 'கூட்டுறவைக் கூட்டிவளர்ப்போம்' என்ற தலைப்பிலான கவிதைப்போட்டியில் முதற்பரிசு பெற்றகவிஞர் ஐயாத்துரையின் 'எல்லாரும் வாழவேண்டும்' என்ற நல்லுள்ளத் துக்குப் பின்வரும் பாடல் அடிகளை எடுத்துக் காட்டலாம்.



கூட்டுறவைக் கூட்டிவளர்ப்போமே - நல்ல
கொள்கைதனைக் கூர்மையுடன் நாட்டில்விதைப்போமே
வீட்டுயர்வு நாட்டுயர்வு தேசம் - என்றும்
மேலோங்கும் கூட்டுறவு விருத்தியத னாலே
கூட்டுறவைக் கூட்டிவளர்ப்போமே

நல்லனவும், நிறைபேறானவையுமான பண்புகளைப் போற்றுவதோடு அவற்றின் வழி நிற்பதும், மற்றையோரை அவ்வழி நிறுத்துவதுமே கவிஞரின் இலட்சியமாக இருந்தமைக்கு அவரின் ஏராளமான கவிதைகள் சான்றுபகர்கின்றன. அதேவேளை, தமது சமகாலக் கவிஞர்களின் கவிதை உருவம், சொல்லாட்சி முதலியவற்றைத்தாமும் கையாள அவர் தவறியதில்லை என்பதற்கும் எடுத்தக்காட்டுக்கள் உள்ளன. காலத்தின் கோலத்தால், சமூகத்தில் ஏற்படும் அலங்கோலங்கள், சீரழிவுகளையும் அவர் தம் கவிதைகளிலே ஆவணப்படுத்தவும் தவறியதில்லை.

"என்ரை பொடியன்தான் உன்ரை மகளுக்கு
ஏற்கனவே யானும் எண்ணி இருக்கிறேன்
பின்னாடி நீங்களுந்தான் பேசிவர வேண்டாம்
பெண்ணையுந்தான் பார்க்கவொரு பேரும் வரமாட்டோம்"

என்று சொந்த மைத்துனர் வந்துபேசியதை நம்பித் தம்முடைய மகளைச் சீதன பாதனத்துடன் (படித்துக் கொண்டு வேலையற்றிருந்த) மருமகனுக்குப் பதிவுத் திருமணம் செய்துவைத்து தந்தை அடைந்த ஏமாற்றம், கவலை என்பன மிகவும் இயல்பாக, எதார்த்தமாகச் சித்தரிக்கப்படுகின்றன.

பொடியன் படித்துப் பொறுப்பான உத்தியோகம்
போய்ப்புகுந்த பின்தான் பொருந்துந் திருமணமே
கடிதம் வருகிறது காசும் கரைகிறது
காதல் பெருகிறது கர்ப்பம் வளர்கிறது.

வடிவாய்ப்படிப்பதற்கு வாரி இறைத்துவிட்டோம்
வாட்டமின்றி வாழ்வதற்கு வாய்த்ததுவே உத்தியோகம்
கடிதம் வருகிறது காதல் அதோகதிதான்
கல்யாணம் வேறென்றைக் கட்டிவிட்டான் என்மருகன்

இதன்பின் என்ன நடந்தது.

'.................................................... என்மகள்
ஆதாரமற்ற கொடியாயத் துடிக்கின்றாள்'.

என்று கவிஞர் முடிக்கும் பொழுது, பெண்ணைப்பெற்று அவளுக்குப் பெரும்பொருளையும் சீதனமாய் அள்ளிவழங்கி, இறுதியில் அபலையாய் அவள் கொம்பிழந்த கொடியாய்த் துடிப்பதைக் காணும் பெற்றோரின் துடிப்பு எம் மனக்கண்களிலும் துடிக்கவில்லையா?

ஒரு பானைசோற்றுக்கு ஓரவிழ்பதமாய் கவிஞர் வே. ஐயாத்துரையின் பாடலடிகள் சிலவற்றைத் தந்துள்ளேன். காந்தியசேவா சங்கம் தமக்களித்த தங்கப் பதக்கத்தினைக் கொண்டு சங்கிலிசெய்து, தம் வழிபடு தெய்வமாகிய கலைமகளுக்கு ஆரமாக்கியவரும், இலங்கையிலே அக்கலாவல்லிக்குக் கோயில் அமைத்தவருமான அவரின் 'கவிதைத்தொகுதி' யாழ். இலக்கிய வட்டத்தின் வெளியீடாக வருவது கண்டு மகிழ்கின்றேன். ஆடல் அழகனின் குஞ்சிதபாத நீழலிலே என்றும் இன்பம் பெருக இருந்திடும் அன்னவர்க்கு எனது இதய அஞ்சலிகள் உரியனவாகுக.

நாயன்மார்கட்டு — ***சொக்கன்***
யாழ்ப்பாணம்.
10.12.2001



# பதிப்புரை

வடக்கின் அபிவிருத்தி, புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா யாழ் இலக்கிய வட்டத்திற்கு, நூல் வெளியீட்டு ஊக்குவிப்பு நிதியாக வழங்கிய நிதியினையும் பயன்படுதி வெளியிடப்படும் பத்து எழுத்தாளர்களின் நூல்களில் ஒன்று கவிஞர். வே. ஐயாத்துரையின் கவிதைகள் ஆகும். கவிஞர் வே. ஐயாத்துரை அரியாலையூரைச் சேர்ந்தவர், ஈழத்துக் கவிதைத்துறைக்கு அணிசேர்த்த கவிஞர்களில் ஒருவர். கலைமகளின் பாதங்களைச் சிக்கெனப்பற்றிய இல்லறத்துறவி, நாடக விற்பன்னர். அவர் யாத்த நூற்றுக் கணக்கான கவிதைகள் சமகால வன்செயல்களினாலும் இடப்பெயர்வுகளினாலும் அழிந்து போயின. தேடிப் பெற்ற கவிதைகளின் தொகுதியாக இந்நூல் வெளி வருகின்றது. யாழ் இலக்கிய வட்டத்தின் மூத்த உறுப்பினரான கவிஞரின் ஆத்மா, திருப்தியடையுமென எண்ணுகிறோம்.

யாழ் இலக்கிய வட்டம், — ***புத்தொளி நா. சிவபாதம்***
26.12.2001
பொருளாளர்
யாழ். இலக்கிய வட்டம்

யாழ் இலக்கிய வட்டத்தின் 20ஆவது ஆண்டு விழாவில் ..



கலைஞர்கள், புலவர்கள் உயிரோடு இருக்கும்போது அவர்களைக் கௌரவிக்கும் வழக்கம் மலிய வேண்டும்.

அந்த வகையில் யாழ். இலக்கியவட்டத்தினர் தமது 20ஆவது ஆண்டு விழாவில் இரு முதுபெரும் கவிஞர்களைப் பாராட்டிக் கௌரவித்தனர்.

நல்லூர் இந்து விடுதியில் நடந்த விழாவில் கவிஞர் வே. ஐயாத்துரைக்கு, யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் சு. வித்தியானந்தன் பொன்னாடை போர்த்துகையில் எடுக்கப்பட்ட படத்தை மேலே காணலாம்.

நன்றி சஞ்சீவி (10.05.1986)



# எல்லாம் அவன் செயல்

பிறந்த அருமைப் பிள்ளையென் றாலும்
பெரும்படி நற்பலன் பார்த்து
அறிந்து கொள்வதற் காசைப் படுவர்
அதிசயப் படுவதற் கில்லை!

பிறக்கும் பொழுது கிரக நிலைகள்
பிழையாய் இருந்தன வென்றும்
பிறந்த திகதியும் பெயரின் இலக்கமும்
பேதமாய் இருக்கிற தென்றும்

கல்வியிற் கவினார் முன்னேற் றத்தினைக்
காண்பது கஷ்டமே யென்றும்
கமத்தொழில் கைத்தொழில் கலைத்தொழில் எதிலும்
கனம் பெற முடியா தென்றும்

நல்விவா கத்தையும் செவ்வாய்க் குற்றம்
நாட விடாதென நவின்றும்
அல்லலைக் கொடுக்கும் அவகா லத்தையும்
அளந்தறி வித்தது ஆய்வு.

பெற்றோர் தமக்குப் பெருத்த கவலையைப்
பின்னின சாத்திரப் பீடம்
சற்றே னுந்தளர் வில்லா யானும்
தலைவன் தாளினைப் பணிந்தேன்

எல்லா மவன் செய லென்றே நினைந்து
எக்கரு மத்திலு மிணைந்தேன்
நல்லோர் மதிக்க நயம்பல பெற்றே
நடக்கின் றேனெனை நம்பி

# புலமை பூத்து வாழுவோம்

1. செம்மை யாண்டு கொள்ள வேண்டிச்
சிறுவ ராண்டை வைத்தனர்
சிறுவர் நாங்கள் திறமை பூண்டு
சிறப்பி னோடு வாழுவோம்.

2. நம்மைத் தூண்டி நன்மை வேண்டி
நல்வி ழாக்கள் வைத்தனர்
நாளைத் தாண்டி நாம்வளர்ந்து
நாட்டைக் காத்துக் கொள்ளுவோம்.

3. தம்மைக் காட்டி நம்மைக் கூட்டித்
தத்து வங்கள் சாற்றினர்
தந்தை தாயைக் குருவை நமது
சக்தி யென்றே போற்றுவோம்.

4. பொம்மை வேண்டித் தந்து காலப்
புதுமை தன்னைக் காட்டினர்
பொருளைத் தீண்டிப் புத்தி கூட்டிப்
புலமை பூத்து வாழுவோம்.

5. கொஞ்சும் குழந்தைப் பிள்ளைப் பருவம்
கூடிக் கோலச் சிறுவர் நாம்
கூர்மை நேர்மை வாய்மை கூடிக்
குற்ற மின்றி வாழுவோம்.

6. விஞ்சும் இளமை முதுமை மேவி
விளங்கப் போகும் பிரசை யாம்
வித்தை கற்றுச் சித்தி பெற்று
மேன்மை யுற்றே வாழுவோம்!



# மதங்களைத் திரையாய் மாற்றாதே!

மதுவெறி மாறும் சிறுபொழுதில்
மதவெறி மாறா தொருகணமும்
இதமறி யாதார் இனவெறியும்
இடருள தாகும் இப்புவியில்

மதவெறி இனவெறி மயக்கங்கள்
மருவிய தாலே சிலமக்கள்
மதநெறி வரம்பை மீறிநின்றே
மன்பதைக் கின்னல் விளைக்கின்றார்

மனிதரின் வாழ்ககை மலர்வதற்கு
மதங்களும் உயர்நிலைப் படியாகும்
புனிதமெய் பூக்கும் மதங்களினைப்
புகுத்திடப் பொறுமையைப் பொற்பாய்க்கொள்

மதங்களை மனிதர் ஆக்குகிறார்
மதங்களும் மனிதரை ஆக்கிறது
இதங்களை இனிதுறப் பேணாமல்
இடர்தனை விலைக்கு வாங்காதே

மதங்களில் மலரும் மணிமொழிகள்
மனித மகான்களின் வாக்காகும்
மதங்களைப் பேதப் படுத்துவது
மகான்களை மதியாத் தன்மையதே

மதங்கைளத் திரையாய் மாற்றாதே
மறைந்திருப் பதற்காய்ப் போற்றாதே
இதங்களைத் தருமுயர் சுரபியென
இடையறா நினைத்து ஏத்துதியே

உண்மையைத் தெய்வ மெனப்பேணு
உயிாகளை உயர்வெனத் தினங்காணு
தண்மையும் வண்மையும் நுண்மையுமாய்
சர்வ மதத்தையும் தலைகொள்ளு

# வெண்காயம் சுக்கானால்?

உயிர்தங்கி உறவாடும்
உடலெங்கள் உடலே!
உயிர்நீங்கின் உதவாத
உடலெங்கள் உடலே!
பயிர்பச்சை கெட்டிடில்
பசளையாய் ஓம்பும்
உயிர்நீத்த உடலசாம்பர்
ஒரு பிடியே யாகும்
தயிர்விட்டு நெய்விட்டுச்
சாப்பாடு போட்டும்
துயர் பட்டு உயிர் விட்டுச்
சோருமே உடலம்
நயமுற்ற பணிதொட்டு
நடமாடு முடலம்
உயிர்விட்டும் புகழ்பெற்ற
உடலாகும் உணர்வோம்

உயிர்கொன்று ஊனினை
உவகையொடு உண்போவார்
உள்ளொன்று வைத்துமே
புறமொன்று சொல்வோர்
பியர்பிஸ்கி சாராயம்
பிரியமொடு குடிப்போர்
பின்பக்கம் சாடியே
பெரு வீரம் புரிவோர்
உயர் வற்ற செய்கைகளில்
ஊக்கமுள மாந்தர்
உயிர் நீத்தும் பலர் திட்டில்
ஓயாது நிற்பார்



பெயர் தீட்டிக் கல்வெட்டில்
பிறங்கவும் செய்வார்
பேதங்கள் பல செய்தும்
பெரு மனித ரென்பார்
மயிர்வெட்டி மைதீட்டி
மணிகட்டிப் பார்ப்பார்
மடிப்புக்கள் கலையாத
உடைகட்டிப் பார்ப்பார்
வயர்விட்டு மருந்துகளை
வலிந்தூட்டிப் பார்ப்பார்
வருகின்ற விதி தட்டி
வாழஅறி யாரே!

உடலுக் குள்ளே உயிரிருக்கும்
உரிய காலம் வரைக்கும்
கடமை உடமை காதல் கனவு
களிப்பும் கலக்கம் உளதே!
உடலை விட்டு உயிரும் பிரிய
உருத்தும் உறவும் எங்கே!
படலை தொட்டுச் சுடலை வரைக்கும்
பரிவும் எரியும் வரைக்கே!

முடிவு மட்டும் இனிது சேவை
முதிர்ச்சி கொள்ளு வீரேல்
படியுள் வரைக்கும் நெடிது நினைவு
பரந்து விரியும் பாரீர்
கொடிது கொடிது அடிமை கொடிது
குலையும் வழியைத் தேடி
விடிவு தன்னை விரைவிற் கண்டு
விளங்க வேண்டும் இனிதே!

அழிந்து போகும் உடலமென்று
ஆசைக் கடிமை யாகி
எழுந்த பாட்டில் நடந்த கொள்தல்
இடரை யாக்கும் தினமே!
மொழிந்து போந்த முதுமை அறிஞர்
முழுமை நெறியில் முனைந்து
இழிந்த உடலம் இனிது புகழில்
எழுந்து வாழச் செய்வீர்!

வெங்காயம் சுக்கானால் விங்குபுகழ் வீழ்ந்திடுமோ?
எஞ்ஞான்றும் இன்பணியை ஈட்டிடுவீர் பங்காளாய்
பாருக் கொருவரெனப் பண்பில் தவறாமல்
நேருக் குழைத் திடுவீர் நீடு!



# சுற்றம்

குற்றந் தனையெடுத் தாண்டுகொண் டால்நல்ல
சுற்றங் குலைந்தே துயர்வருமே
பற்றில் நிறைந்தவர் சுற்றமெடா – ஔவைப்
பாட்டி உரைத்ததைப் பற்றிடடா

அன்னை வழியினர் சுற்மெடாவுன்றன்
அப்பன் அடியினர் சுற்றமெடா
கன்னித் தொடர்பினர் சுற்றமெடா – கல்வி
கற்பித்த சற்குரு சுற்றமெடா!

பள்ளி தனிற்பலர் சுற்றமெ டாவுன்றன்
பக்குவத் தாற்பலர் சுற்றமெடா
தெள்ளி அறிவெழும் போதினிலே – உன்றன்
சீர்மொழி கேட்பவர் சுற்றமெடா!

நல்லன செய்திட வேண்டுமெ டாயிந்த
நாட்டக்குச் சொந்தமாய் வாழ்ந்திடடா
பல்வகை யாற்புக ழெய்திடடா – இந்தப்
பாருக்கு நன்னெறி கூறிடடா!

சேவை தனிற்சிறப் பெய்திட டாயிந்தத்
தேசமெல் லாஞ்சுற்ற மாகிவிடும்
சாவை அடைந்திடும் போதினில் செயத
தர்மமே தாங்கிடும் சுற்றமெடா!

## துன்பம்

தன்னி னத்தைத் தாழ்த்திவேறு
தயவுதனில் வாழ்வது
கண்ணை விற்றுச் சித்திரத்தைக்
கையிலேந்தும் தன்மையே!

அன்னை தந்தை சொல்லைமீறி
அறிவிழந்து போனவன்
முன்னை விட்ட குறையையெண்ணி
மூழ்குவனே துயரினில்

இளமை தன்னில் கல்விகற்க
இட்டமின்றி விட்டவன்
வளர்ந்த போது அதையுணர்ந்து
மனம்வருந்திக் கொள்வனே!

ஆய்ந்து ஓய்ந்து பார்த்திடாது
அக்கிரமம் செய்தவன்
மாய்ந்து மாய்ந்து கண்ணீர்மல்கி
மடிந்தவன்போ லாவனே!

நாட்டைக் காட்டிக் கொடுத்துச்சொந்த
நன்மைதன்னை நாடினோன்
ஓட்டை பட்ட உள்ளத்தோடு
ஓய்ந்தொதுங்கிப் போவனே!



## இரக்கம்

அங்கநிறை வற்றதினால்
அனுதினமும் அழுபவர்க்கும்
அன்னைதந்தை சுற்றமின்றி
அலைபவர்க்கும் இரங்கிடுவோம்

சீதனமே சிறிதுமின்றித்
திருமணமே செய்யாமல்
பேதலித்தே பெருந்துயர்கொள்
பெண்களுக்காய் இரங்கிடுவோம்

பசுமையற்றே நசிவுற்றுப்
படுமுறைகாண் பயிர்களுக்குக்
கசிவுதனைக் காட்டுதற்குக்
கனிவுடனே இரங்கிடுவோம்

வறுமையுற்றே வாடுகின்ற
வளமற்ற நாட்டினுக்கு
திறமையுற்ற செல்வமெழச்
சேவையினால் இரங்கிடுவோம்.

# இருக்கண் வருங்கால்

இடுக்கண் வருங்கால் இணையடிக் குறளிற்
கொடுத்தார் கொள்முதல் குறிப்பொரு ளாக
எடுத்தேன் கடனென இதனைக் கொண்டே
கொடுப்பேன் முதலொடு வட்டியும் கூட்டி

இடுக்கண் துன்பம் இடும்பை இலம்பை
தொடுத்தொரு கருத்துச் சொல்லினைச் சுட்டும்
அடுத்தே வருதலம் அதனை மனிதன்
எடுத்தா ளாததும் இடுக்கணுக் கிடுக்கே

வினைப்பய னால்வரும் துன்பமும் உண்டு
வெறித்தொடர் பால்வரும் துன்பமும் உண்டு
மனுப்பயன் இன்பமும் துன்பமும் சமமாய்
மதித்திட வாழ்வதே மகத்துவ மாகும்.

மீட்சி யற்றிடும் நோய்களு முண்டு
மீளாத் துயர்தரு மிடிகளு முண்டு
ஆட்சி பெற்றிடும் ஆசை நோய்களும்
ஆற்றொ ணாத்துயர் ஆக்குவ துண்டு

இடுக்கண் வருங்கால் நகுக வென்றால்
இக்கா லத்தில் இடுக்கண் புரிவோர்
அடுத்துக் கெடுக்க அனுசர ணைக்கண்
ஆக்கிய பேர்வழி யாகியே அலைவோம்

பொல்லுக் கொடுத்தே அடிவாங் கியநிலை
பொறுப்பை எடுத்துச் சிறைபோம் பிணைநிலை
சொல்லுக் கொடுத்தே பல்லுடை படுநிலை
சோர்வகை யின்றியே இடுக்கண் நகுக.



எமது செயற்கண் எமக்கே இடுக்கண்
ஏற்படு மாயின் எதற்கும் கலங்கேல்
அமைதி முயற்சி அறிவுத் திடங்காண்
ஆரையும் அதற்குள் அகப்படுத் தாதே!

உன்செய வதனால் இன்னொரு வர்க்கே
ஊறுவந் துற்றதென் றுணர்வா யானால்
என்செய் லல்ல இறைசெய லென்றே
ஏமாற றாதே நாமாற் றாதே!

கயரை எடுத்தவன் கள்வனே யாகக்
கலக்கிக் குடித்தோன் தப்புதல் காண்பாய்
உயிரை விடப்பெரி தாமுயர் மானம்
உண்மையும் அவ்விதம் உயர்ந்ததே யாகும்.

பல்லுடை பட்டார் பொல்லடி யுற்றார்
நல்லுடை விட்டார் சொல்லடி பெற்றார்
அல்ல லடைந்தும் அயர்விலா திருந்தே
எல்லரும் போற்றும் சுதந்திரம் பெற்றார்

இலட்சிய வழிதனில் இடுக்கண் வரினும்
கலக்கமே யின்றிக் கடமையைக் காத்த
இலக்கணம் காந்திக் கிசைந்ததேக் யாகும்
அலட்சியப போக்கை அடியொடு விடுமின்

இலட்சியப் பாதையில் இன்பமும் துன்பமும்
இணைந்துற வாடும் இரட்டைக் குழந்தைகள்
அலட்சியப் பாதையில் ஆண்டா னடிமை
ஆவதே திண்ணம் ஆம்பய னில்லை.

# முன்னுது மின்னுது புத்தொளியே

பாடுங்கள் புலவர்க ளேயெனப் பரவி
பாரிய தலையங்கம் பார்த்தோமே.
படித்திடும் கவிதையில் புத்தொளி பிறக்கட்டும்
பாங்கையும் பாட்டினில் பார்த்தோமே.

கூடிய கவிதையைக் கூர்ந்தே கணித்துக்
கொடுத்திடும் என்கவிக் கொள்கையிதம்
கூடுமோ வறியேன் கொள்பவர் செம்மைக்
குறிப்புகள் அறிவதும் கூர்குணமே

இத்தரை மீதினில் எங்கும் எரிதனல்
எரியனல் பெருங்கனல் எரிநிறு
அத்தனை அழிவுகள் சிதைவுகள் அதன்மேல்
ஆர வாரமோ அதிமோசம்

நீறுகள் பூத்தமுன் நெருப்பினில் நின்றே
நியாயங்கள் நீளுது நினைத்தபடி
ஆறுதல் தரவல்ல ஆளுமை அழகில்லை
அவசர காலமோ அதிவேகம்

திரும்பவம் திரும்பவும் பேச்சுகள் வார்த்தைகள்
திருத்தங்கள் வருவதன் முன்னாடி
குருத்துகள் மடிவொடு குடிகளும் அழியுது
குண்டுகள் குமிந்திடும் கொடுமையதால்

பெருத்திடப் பெருத்திடப் பிறபடை விரிப்பொடு
பின்பொரு சரித்திரம் பிறந்திடுமோ?
கருத்தொடு கவனிப்பின் காரிய சித்திகள்
கைகூடும் யாரிதைக் கவனிப்பார்



பெண்களைக் கண்களைப் பெருமையைப் பாடிய
பேரமை இலக்கியப் பேறுகளும்
மண்விழை சுதந்தர மார்க்கமென் விதிக்கிதம்
மனமதிற் கொள்ளுதல் மாட்சியதே

கண்விழை கவிதைகள் காவியம் ஓவியம்
கவினுறச் செய்திடும் கருத்துநிறை
அண்ணல்கள் வாருங்கள் அவனியைப் பாடுங்கள்
அசதியை நீக்குங்கள் அவசியமே!

இடியென்ன மழையென்ன இடுக்கண்கள் நமக்கென்ன
எழுதிடும் பேனா வலிமையின்மேல்
படிதனில் பாரிய பாணங்கள் பாயுது
பாரதப் போர்முறைப் பாணியிலே

விடுதலைக் கொடிதனில வீரியம் விழிக்குது
விடியலை நோக்கியே விரைகிறது
முடிதலைக் கேறிய முன்னவர் முறைதனை
முன்னுது மின்னுது புத்தொளியே!

# புதுக்கவிதை

விதைத்த தெல்லாம் விளைய வில்லை
வேகு தெங்கள் நெஞ்சம்
புதுக்க விதை போடு கின்றீர்
பொருளுக் கென்ன பஞ்சம்

அதைக்க விதை யென்று சொல்லி
ஆட்டம் போடு கின்றீர்
விதைத்த வுடன் விளைந்த தென்றும்
மேலும் துள்ளு கின்றீர்

புதுக்க விதை யென்று நீவிர்
பொருந்திச் சொல்லும் பொதியைப்
பதுக்கி வேறு பாதை செல்லல்
பயனை நாட்டும் பாரில்

நொடியும் நுண்மைக் கவிதை யாகும்
நோக்கி நுணுகிப் பாரீர்
அடிய ணிச்சீர் தளையி லாத
ஆக்கம் கவிதை யல்ல

சொல்லைப் பொருத்தல் தொல்லை யென்றால்
சுருக்கி உருக்க மான
நல்ல கருத்தை உரையில் காட்டி
நாடச் செய்தல் நலமே

கவிதை யென்றும் கவிஞ னென்றும்
கணிப்பு வாங்க வேண்டிச்
சவியி லாது தடுக்கி வீழ்தல்
சந்தி சிரிக்கும் தம்பி

இலகு வாக விளங்கு தற்கே
எளிய நடையில் எழுது



நலம தான கவிதை மலரும்
நாமும் நயந்து கொள்வோம்

இருண்ட வானில் நட்சத் திரங்கள்
இங்கு மங்கும் இலங்கும்
மருண்ட போக்கில் கருத்தை விதைக்கின்
வருந்தி அறிய வேண்டும்

உருண்டு ஓடும் ஆற்றி னொழுக்கு
ஓசை ஒன்றி ஊட்டக்
கருத்தை விரித்துக் கவிதை கட்ட
கற்க வேண்டும் தம்பீ

பொருத்த மற்ற முறையி லேதோ
புலம்பி விட்டுப் புகழாய்
விரித்து விட்டோம் கவிதை யென்றால்
விளக்க நீவிர் வேண்டும்

பண்டைக் காலப் பண்டி தர்கள்
பாட்டுப் பாடி வைத்தார்
தொண்டைக் குள்ளே திணிப்ப தற்குச்
சூத்தி ரங்கள் தைத்தார்
எங்கள் பாட்டும் இவ்வி தந்தான்
இன்னல் செய்யு மென்றோ
உங்கள் பாட்டை உடைய விட்டு
ஓடிச் செல்கின் றீரோ?

உங்க ளிடத்தல் உண்மைக் கருத்து
உதய மாகும் ஊற்றாய்
தங்கள் பாட்டில் செல்வ தாலே
தலையெ டுக்கு தில்லை

நீங்கள் சொல்லும் புதுக்க விதை
நீட்டந் தன்னை மடக்கி
பாங்கு யர்ந்த குறளின் சீரில்
பகர்தல் பண்பு பாரீர்

# மனித உணர்வு

மதுர மான நெறிகளோங்கி அறிவு பெருகவே
மனித உணர்வு புனிதமாக மலரவேண்டும் (மதுர)

இதம தான உணர்வு வாழ்க்கைக் கேணியாகுமே
இடரை விளக்கும் உணர்வுகளும் ஏறியிறங்குமே (மதுர)

வீறு கொண்ட போரைச்செய்யும் வீரஉணர்வுகள்
விதியை மீறி எதிரைப்புரியும் விசமஉணர்வுகள்
ஊறு வந்த போதுமாறி உணருமுணர்வுகள்
ஆறுதலே அற்றவர்க்கு அதிகமாகுமே (மதுர)

உணர்வை இழக்கும் போதுமனிதன் உடலம் சோரவே
உறுதியற்ற நெஞ்சனென்ற உரையும்வருகுதே
உணர்வை அடக்கும் அறிவுஆற்றல் உள்ளமனிதனே
உலகவாழ்க்கைக் குயர்ந்த உணர்வை
ஊட்டும் போதனே (மதுர)

கணமும் எதையும் சிந்தனைசெய் அறிவுவளரவே
கல்வியென்ற கண்திறக்க உணர்வுவேண்டுமே
உணர்வும் அறிவும் ஒட்டிப்பிறந்த இரட்டையர்களே
உடலும் உயிரும் போலும் மேலும் ஒன்றவேண்டும்மே (மதுர)



# இயற்கை வனப்பு

கண்கவரும் வண்ணமலர் கண்சிமிட்டுதேன்
கதிரவனின் காதல் வீசும் காரணத்தாலே - (கண்)

வண்ணமலரைச் சுற்றிச்சுற்றி வண்டுபாடுதே
மலரிலூறும் தேனைப்பருக வாய்ப்புத்தேடுதே - (கண்)

நாறும்மலரின் ஊறும்தேனில் நாட்டம்பெருகவே
நயந்துநயநது சுவைக்கவண்டு நண்ணிவருகுதே - (கண்)

வாடிப்போகும் மலரைநம்பி வண்டுவந்துதேன்
பாடிப்பாடிச் சுவைத்துவிட்டுப் பறந்து போகுதே - (கண்)

மதுவும்முடிய வடிவுமொடிய மலரும்மடியுதே
மருவித்தேனைப் பருகிவண்டும் மறந்துபோகுதே - (கண்)

புலரும்பொழுதில் புதுமையாகப் பூத்தமலரெங்கே
புவனமீதில் சருகதாகிப் பொருந்திப்போகுதே - (கண்)

# தேசிய ஒருமைப்பாடு

தேசிய ஒருமைச் செம்மைநிலை
திருவளர் பெருமைத் தேர்வுநிலை
ஆசிகள் பரவும் அன்பு நிலை
அடிமைகள் குடிமைகள் அற்றநிலை - (தேசிய)

திருடுவ தாகிய தீயநிலை
திட்டி உரைத்திடும் சிக்கல்நிலை
வருடுவ தாகிய தாழ்வுநிலை
வாரா திருப்பது ஒருமைநிலை - (தேசிய)

புழுகுதல் இகழுதல் பொய்மைநிலை
பொருதுதல் குமுறுதல் பன்மைநிலை
வழுவுதல் இழுகுதல் வஞ்சநிலை
வளரா திருப்பது ஒருமைநிலை - (தேசிய)

ஒருமையி னாற்பல உரிமைநிலை
உறவுக ளோங்கும் உச்சநிலை
வருமிய பாகநல் வாழ்க்கைநிலை
வளமுறை நிறையும் வண்மைநிலை - (தேசிய)



# நிழலின் அருமை

நிழலே நிழலே நிறைநிழலே
நிரைநேர் மரங்கள் தருநிழலே
பொழுதாற் பொருந்தி வருகின்றாய்
பொருளின் உருவாய்த் தெரிகின்றாய்

களையா றுதற்கு இடமாவாய்
கலையோ துதற்கு மடமாவாய்
விளையா டுதற்கு இடமாவாய்
விழிமூ டுதற்கு மடமாவாய்

அழையா விருந்திற கிடமாவாய்
அருள்கூ ருதற்கு அகமாவாய்
களிகூ ருதற்கு இடமாவாய்
கதைபே சுதற்கு மடமாவாய்

நிழலின் அருமை வெய்யிலிலே
நின்றோ ருக்கே தெரியுமென்று
முழுமை யான கருத்ததனை
முன்னோர் வைத்துச சென்றனரே

நிழலே நிழலே என்னிழலே
நீயேன் என்னைத் தொடர்கின்றாய்
அழிந்தே போகும் உடலுடனே
அழிந்தே போவாய் அறியாயோ

உடம்பில் இருந்தே உதிக்கின்றாய்
ஒளியால் உன்னை மதிக்கின்றேன்
படம்போல் நீயும் பதிகின்றாய்
பருவம் பலதாய்த் தெரிகின்றாய்


நடக்கும் போதே முன்பின்னாய்
நடந்தே நீயும் வருகின்றாய்
நடிக்கும் போதும் நடிக்கின்றாய்
நானில் லாமல் நீயில்லை

உதயத் தின்கண் வளர்கின்றாய்
உச்சிப் பொழுதில் குறைகின்றாய்
மதியத் தின்பின் வளர்கின்றாய்
மாலைக் குப்பின் மறைகின்றாய்

நேரம் பார்க்க ஓர்சமயம்
நிழலே நீயும் உதவுகிறாய்
பாரம் உனக்கு நான்தானே
பாரில் பதியும் படம் நீயே

என்னிழ லேயெனக் காறுதலை
எப்பொழு தேனும் தந்தனையோ
தன்னிழ லாலே தருக்களுமே
தாமம் செய்வதை உணர்வாயோ

பலகோ ணத்தும் ஒளிபரவின்
பரவ மாட்டாய் என்னிழலே
சிலகோ ணத்தில் ஒளிபரவின்
சிறுத்தும் பெருத்தும் தெரிகின்றாய்






## நேரம்

பிறந்தோம் பிறந்தோம் ஒருநேரம் - அது
பிழையோ சரியோ சபநேரம் (பிற)

நிறைந்தே வளர்ந்தோம் நெடுநேரம் - பல
நினைவால் இழந்தோம் சரிநேரம் (பிற)

மறைந்தே போவோம் ஒருநேரம் - அதை
மறவா திருப்போம் பலநேரம்
சிறந்தே செயலார் நேரமெல்லாம் - எமைச்
செகத்தில் நினைக்கும் தினமாகும் (பிற)

சென்ற நேரமது திரும்பிவராது
சேரும் நேரமது விரும்பியிராது
ஒன்றும் நேரமதில் நின்றயராது
ஊக்க மாகவே உழைத்திடவேண்டும் (பிற)



## பட்டம்

படித்துப் படித்துச் சித்தி யெய்திப்
பட்டம் பலதைக் கொள்ளலாம்
படித்துப் படித்துப் பதவியேற்றுப்
பணிகள் பலதைப் பரவலாம்
படித்துப் படித்துப் புத்தி வந்தும்
பயனி லாமை செய்வதால்
படித்த மடைய னென்னும் பட்டம்
பரவ லாகி வருதல் பார்

படித்த பலத்தை விடுத்துக் குடிக்குப்
பலிய தாகிப் போவதும்
படித்த பலத்தை அடுத்துக் கெடுத்துப்
பதவிப் பந்தம் பிடிப்பதும்
படித்த பலத்தை எடுத்துக் காட்டிப்
பாம ரரைப் பழிப்பதும்
படித்த மடையர் செய்கூத் தென்றே
படித்துப் படித்துச் சொல்லுவோம்!





## தொழிலாளி

வையத்தி லேதொழி லாளி - தினம்
வண்மை யுற்று நேர் வாழி
தெய்வத்திற் கேயோளி யேற்றி - நல்ல
தேசு தேடுந் நிற னாளி

உய்வை நாடுமுழைப் பாளி - நாட்
டுயர்வைப் பேணுந்தொழி லாளி
மெய்யிரத்த மொடு மேனி - கரம்
மேன்மை யுற்று நேர் வாழி

வெய்யிலாலும், மழையாலும் - பனி
மேவிக் கொட்டுங்குளி ராலும்
நைவி லாது அவன் மேனி - திடம்
நாட்டிப் பாடுபட வாழி

மலையிலே பசுமை யாளி - தன்
மனதி லே கசிவை யாழி
அலையி லே யிசைவை ஆளி - அவன்
அசைவினாற் பொருளை ஆளி

கற்றறிந்தவர்கள் காட்டும் - நல்ல
கற்பனைக் கவை மூட்டும்
பற்று மேவும் தொழி லாளி - அவன்
பாதையிற் பலவிஞ் ஞானி

நிலவி லே யுலவு வோனும் - தினம்
நினைவு கொள்ளுந் தொழிலாளி
பல மிருந்துவரின் நாடே - கொடும்
பஞ்ச மின்றி நிறைவாகும்.

# ஒன்றினிலிருந் தொன்றாகும்

மனிதனில் மலர்வது அறிவு - அதன்
மறுபிறப்பாம் செயற் செறிவு
புனிதனில் புலர்வது நிறைவு - அதைப்
புரிவது தான்நெறிச் செறிவு

கலைதனில் கனிவது கருத்து - அதைத்
கருதிட நெறிதனைப் பொருத்து
நிலமிகும் கலைதனில் பிறப்பு - ஒரு
நாட்டுயர் நிலைதனில் சிறப்பு

இலட்சிய நிறைவினின் சிறப்பு - உயர்
இலக்கிய மாகிடும் பிறப்பு
அலட்சிய முறைதனில் மறைப்பு - ஒரு
அரங்கொடு அழிந்திடும் பிறப்பு

மணமிகு மலர்கனி யாகும் - கனி
மறுபிறப் பால் மலர் தேரும்
குணமிகும் கலைமல ராகும் - அது
குவாயக் கூர்மதி யாகும்

மணிமொழி வழிமொழி யாகும் - அதன்
மறுபிறப் புயர் மனு வாகும்
பணிபல மழகிய லாகும் - உயர்
பரிதியும் பலமுத லாகும்



முதலவன் மறுபிறப் பியற்கை - அதை
முறையுடன் பேணுதல் செயற்கை
அதிபல செயற்கையின் பிறப்பு - உயர்
வாயவிஞ் ஞானமெய்ச் சிறப்பு

பகுத்தறி வுளனே மனிதன் - அவன்
பணிநிறை யளவே புனிதன்
அகத்துறை விளைவே இறைவன் - அவன்
அருட்சியின் அளவே அழகன்

கனிதனில் காணிடும் மெதுமை - சுவை
கணிப்புற வாழ்ந்திடும் பெருமை
நனிதனில் காணிட இதமெய் - தினம்
மலர்வது மாபெரும் புதுமை

இறைவனை நோக்குதல் இனிமை - இறை
இருப்பதை ஊக்குதல் தனிமை
உறைதனை நீக்குமுன் உயிர்மெய் - இதை
உணர்வுற வாக்குதல் ஒருமை

தெய்வத்தை நோக்கிடும் மனிதா - சில
தீமையைப் போக்கிடத் திடஞ்செய்
வையத்தை நோக்கிடும் மனிதா - பல
வறுமையைப் போக்கிட வளஞ் செய்

தொட்டதும் இறைவனைத் தொழுவாய் - நோய்
விட்டதும் வெறியினில் விழுவாய்

பட்டதும் அறிவினைப் பெறுவாய் - வாய்
விட்டுநீ விரதத்தைப் புரிவாய்

திட்டமெய் பிறப்பது சட்டம் - உயர்
தியாகமெய் சிறப்பது பட்டம்
சட்டமெய் சரிவது நட்டம் - உயர்
சமநிலை பிறப்பது வட்டம்

அன்பினிற் பிறப்பது ஆட்சி - உயர்
ஆட்சியிற் பிறப்பது மாட்சி
வன்பினிற் பிறப்பது தாழ்ச்சி - பெரும்
வருத்தலைத் தருவது சூழ்ச்சி

ஒன்றினி லிருந்தொன் றாகும் - அது
உருப்படியாகி வேறாகும்
சென்றதை மறந்தொன் றாகும் - உயர்
திருத்தமெய் திருநிறை வாகும்

வாக்கு நிறைந்திடும் மனிதன் - சில
வார்த்தை மறந்திடில் புனிதன்
ஆக்க நிறைவொடு மனிதன் - உயர்
ஆகமங் காத்திடில் அகிலன்





முதலாவது பரிசு பெற்ற கவிதை

# கூட்டுறவைக் கூட்டி வளர்ப்போம்!

கூட்டுறவைக் கட்டிவளர்ப் போமே - நல்ல
கொள்கைதனைக் கூர்மையுடன் நாட்டில்விதைப் போமே
வீட்டுயர்வு நாட்டுயர்வு தேசம் - என்றும்!
மேலோங்கும் கூட்டறவுவிருந்தி யதனாலே!
கூட்டுறவைக் கூட்டிவளர்ப் போமே!

போட்டமுதல் கூட்டுமுத லென்றே - நன்கு
புரிந்துமுதல் பொருந்துவது புத்திமுத லாகும்
ஈட்டுமுதல் லாபமதை ஏற்றின் - மக்கள்
இணைவுமுதல் கூட்டுறவின் எழுச்சிமுத லாகும்
கூட்டுறவைக் கூட்டிவளர்ப் போமே!

தேட்டமதைக் கூட்டுமுதல் தேடின் - மக்கள்
தேர்ந்துதவும் நிர்வாகச் சீர்த்திமுத லாகும்
காட்டுமொழில் உவமான முதலை - என்றும்
கருதிவரின் கூட்டுறவு கண்ணில் லாகும்
கூட்டுறவைக் கூடிவளர்ப் போமே!

பட்டதடி பலசேர்ந்து கட்டாய் - நன்கு
பலம்பெற்ற பழங்கதையைப் பற்றியறிந் துள்ளோம்
கட்டியடித் தாள்பொருளை யென்றே - ஏழை
கண்கலங்க ஏமாற்ற படுவதையும் காண்போம்
கூட்டுறவைக் கூட்டிவளர்ப் போமே!

வட்டிவெறி வைத்துவதை செய்தே - சொத்தை
வாரியெடுக் கின்றகொடும் வன்முறையும் கண்டோம்
எட்டியடி வைக்காதே தனியே - என்றும்
இணைகுவாய் கூட்டுறவு இயக்கமிதி லினியே!
கூட்டுறவைக் கூட்டிவளர்ப் போமே!

மண்ணோடு சிறுகல்லி சாந்து - சேர்ந்து
வைரமுறும் கல்லாகி வரியாகி ஓங்கி
விண்ணோடு முட்டுமுயர் வீடாய் - நின்று
விளங்குவதும் கூட்டுறவை விளக்குமொரு விழியே!
கூட்டுறவைக் கூட்டிவளர்ப் போமே!

எண்ணோடு எணணொன்றி யேறின் - மேலும்
எண்ணமுடி யாததொகை ஏற்றமுறல் போலும்
வண்மைசேர் கூட்டுறவை வளர்த்தால் - நல்ல
வருமானம் மென்மேலும் வளர்வதைக் காண்போம்
கூட்டுறவைக் கூட்டிவளர்ப் போமே!

பறவைகளில் காக்கைதனைப் பார்ப்போம் - என்றும்
பகிர்ந்துண்டு வாழ்கின்ற பழக்கத்தைச் சேர்ப்போம்
எறும்புகளின் இயக்கத்தை எடுப்போம் - கூடி
இரைசேர்க்கும் இலக்கதனைக் கூட்டுறவில் இணைப்போம்
கூட்டுறவைக் கூட்டிவளர்ப் போமே!

உறுப்புகளின் ஒற்றுமைபி னாலே - என்றும்
உயிருள்ள உடலங்கள் உழைப்பதனை உணர்வோம்
மறுப்பிலது கூட்டுறவை வளர்ப்போம் - நல்ல
வாழ்க்கைக்கு வளமார்ந்த வருமானம் கொள்வோம்.
கூட்டுறவைக் கூட்டிவளர்ப போமே!

விரலைந்தும் வெவ்வேறு விதமே - ஒன்றை
விருப்புற்று மனமேவ விரைந்தொன்றும் பலமே!
தரமொன்று கூட்டுறவி னாலே - ஏற்றத்
தாழ்விலது சமத்துவம் சார்ந்துவரும் நிதமே!
கூட்டுறவைக் கூட்டிவளர்ப் போமே!

குரலொன்று கூட்டுறவை நாடி - நாட்டின்
குடியொன்றி மிடிநீக்கிக் குறைவின்றி வாழ்வோம்



வரவின்றி வாழ்வுவளம் பெறுமோ? - சோம்பல்
வளர்க்காது கூட்டுறவில் தொழில் காத்து வாழ்வோம்
கூட்டுறவைக் கூட்டிவளர்ப் போமே!

சிறுதுள்ளி பெருவெள்ளமாகும் - நல்ல
சீரான கூட்டுறவில் நிதிவெள்ளம் சேரும்
வெறும் பள்ளம் மேல்மாடி யாகும் - விரியும்
விவசாயம் கைத்தொழில்வி யாபாரம் விரியும்
கூட்டுறவைக் கூட்டிவளர்ப் போமே!

மறைவான வர்த்தகங்கள் மடியும் - என்றும்
மலிவான பொருட்களில் மனமார்ந்து படியும்
நிறைவான நிலையங்கள் உயரும் - உண்மை
நெறிசேரும் பள்ளிகளும் நிலைபெற்று வளரும்
கூட்டுறவைக் கூட்டிவளர்ப் போமே!

அறிவுள்ள சமுதாய மோங்கும் - தேச
அரங்கத்தில் அமைதிகாண் ஐக்கியம் மலரும்
வெறிதுள்ளும் பேதங்கள் வீழும் - நாட்டின்
விருத்திக்கு விரிவான விளக்கங்கள் சூழும்
கூட்டுறவைக் கூட்டிவளர்ப் போமே!

வகைசார்ந்த வாகனங்கள் மலியும் - நாட்டில்
வளமார்ந்த செல்வமதின் ஏற்றுமதி பொலியும்
தொகைசேரப் பொக்கிஷங்கள் நிறையும் - வேறு
துறைகளில் நம்நாட்டுப் பொருள்சென்று விரியும்
கூட்டுறவைக் கூட்டிவளர்ப் போமே!

பகையொன்று மாட்டாது பாரில் - இந்தப்
பணிதன்னில் மாந்தர்கள் பலம்பெற்று விட்டால்
நகைபொங்கும் நல்லன்பு நண்ணும் - வேற்று
நாட்டாரின் நகைநம்மை நாடாது பாரர்!
கூட்டுறவைக் கூட்டிவளர்ப் போமே!

## கற்பு

கனலாய் மாறும் கடலாய்ச் சீறும்
கனியாய் மிளிரும் காற்றாய்க் கடியும்
புனலாய்ப் பொழியும் பொழுதாய்ப் புலரும்
பூவாய் மலரும் பொன்னாய் விளையும்
தேனாய் ஒழுகும் திருவாய்த் திகழும்
கூனா திருத்தல் கற்பின் குணமே!

வாய்மை காட்டி தூய்மை கூட்டி
வறுமை காட்டி சிறுமை ஓட்டி
தாய்மை காட்டி சகிப்பை நீட்டி
தகமை காட்டி பகைமை ஓட்டி
ஆய்வை நீட்டி அறிவைக் கூட்டி
பண்பை வளர்க்கும் பாரினில் கற்பே!

விதியை மாற்றும் விரதம் நோற்கும்
விண்ணைக் காட்டும் மண்ணை நாட்டும்
பதியைக் காக்கும் பணியிற் பூக்கும்
பண்பைத் தேக்கி வன்பைப் போக்கும்
மதியை ஈட்டி மாண்பைக் கூட்டும்
நிதியாய் கற்பை நினைமின் நினைமின்

சாவித் திரியும் சத்திய வானும்
சந்திர மதியும் அரிச்சந்திரனும்
திவுள் சிறையிரு சீதையும் ராமனும்
சித்தத் தொருமைச் சிறப்பும் கற்பும்

மேவிய நெறியால் மேன்னிலை பெற்றே
மேதினி மிளிரக் காவிய மானார்

ஆவதும் அழிவதும் பெண்ணா லென்பார்
ஆணும் கற்புக் கமைந்தே
நாளும் வாழ்தல் நன்மை நயக்கும்



## கன்னிப்பெண்ணே கவனம்!

பெண்ணே நீதா னுலகம் - உன்
பீடே நாட்டின் சிகரம்
கண்ணே போலும் கற்பே - கனி
மொழியே நல்ல அமுதே!

அன்னை யாகும் நீயே - நல்
அன்பைப் பேணு வாயே
பொன்னும் மணியும் புறமே - நிறை
பொறையே நல்ல அணியே!

மன்னும் காதல் தானே - திரு
மணமே யாகும் தருணம்
மண்ணும் பொன்னும் மரபும் - அதை
மடியச் செய்தல் காணே!

கன்னிப் பெண்ணே கவனம் - இக்
காலம் காணும் கோலம்
நண்ணிக் கொள்ளு வாயயேல் - எந்
நாளும் துன்பம் மூளும்!

## பொலிவைக் கொள்ளுவாயே !

பூவைக் கண்டு மோகங் கொண்டு
தாவிக் கொய்யும் தங்காய்
ஆவல் கொண்டு அணைக்கும் பூவின்
அழகும் அதிகம் நிலையா

பூவை யென்றே புகலும் உன்றன்
பொலிவும் கொஞ்ச நாளே!
நீவைத் திருக்கும் நிறைவுப் பொருளை
நிலைக்கச் செய்வாய் நிதமே!

பாவை தன்னை எவரும் தொட்டுப்
பார்ப்பர் விருப்பப் படியே
பாவை யென்றெ பகரும் நீயோ
பண்பில் நின்றும் தவறேல்

பகட்டைக் கண்டு பல்லை இளித்துப்
பகிடிக் கிடமா காதே!
புகட்டும் குறளைப் பொருந்திநீயும்
பொலிவைக் கொள்ளு வாயே!

கண்ணைக் கருத்தைக் கவரச் செய்யும்
கன்னிப் பருவம் தங்காய்
எண்ணந் தன்னை அலையச் செய்தே
என்றும் பாழா காதே!



## கன்னங்கள் கன்றிடும்

கண்ணாடி போன்றது கற்பேயெடா - அது
காசு கொடுத்தாலும் வாராதெடா
பெண்ணான என்னிடம் வந்தேயெடா - ஒரு
பித்தனைப் போல நீ கத்துவ தேன்?

உன்னை யறிந்தவர் ஊரவர்கள் - உன்னை
ஊர் சுற்றும் நாயென்று சொல்லுகின்றார்
என்னை மயக்கிட வேஷமிட்டே - இங்கு
ஏனோ அலைகின்றாய் ஏமாளியே!

கன்னியென் கற்பைக் கெடுத்திடவே - என்றும்
கங்கணம் கட்டிடும் காடையனே
உன்னிடம் தங்கையும் உண்டேயெடா - அவள்
உன்னத வாழ்வை உணர்வாயெடா

என்னை முடிப் பவன் இன்றுவரை - என்னை
ஏறெடுத்தே கண்ணால் பார்க்க வில்லை
என்றும் இறைபக்தி கொண்டவனே - அவன்
இன்பமே என்றனுக் கின்பமெடா

பெண்களில் பேய்களும் உண்டேயெடா - அந்தப்
பேய்களுக் குன்றுணை வேண்டுமடா
கண்களைக் காட்டாதே என்னிடம் - உந்தன்
கன்னங்கள் கன்றிடும் சென்றிடடா

## "பாரியவாதம்"

பாரிச வாதம் பயங்கர பூதம்
நேரிய உடலை நெரித்திடும் வாதம்
காரியக் கண்ணைக் கலக்கிடும் வாதம்
கட்டழ கனைத்தும் கலைத்திடும் வாதம்

வாய்தனை இழுக்கும் வலிவுளவு வாதம்
சாயென அழுத்திச் சரித்திடும் வாதம்
கைதனை மடக்கும் கால்தனைப் பிரட்டும்
வாய்தனை முடக்கும் மிடுக்குள வாதம்

கண்களை இடுக்கும் கன்னத்தை ஒடுக்கும்
எண்ணத்தைக் கெடுக்கும் இராட்சத வாதம்
புண்படச் செய்யும் புத்தியைப் புரட்டும்
புரளிகள் புரியும் பூதமே வாதம்

சீவன் இருந்தும் செத்த பிணமெனச்
செகத்தில் மனிதரைச் செய்திடும் வாதம்
பேதமே இன்றிப் பெற்றியாய் வாழப்
பெருஞ்சா தனைகள் பேணிட வேண்டும்

படுக்கையைக் காட்டும் பாரிய வாதம்
பாரிய இடுக்கண் பண்ணிடும் வாதம்
கிடைக்கையைக் குறைத்து நிமிர்ந்தே இருந்து
கெதியாய் நோயைக் கெடுத்திட வேண்டும்

எப்பொழு தும்நல் அப்பியா சத்தினை
இதமுடன் இயற்றின் இதற்கிட மில்லை
அப்படி மிஞ்சி வாதம் அணுகின்
அதற்கிட மழிக்கப் படுக்கையில் அயரேல்



குடிகுடி யென்றே குடித்திட வேண்டும்
குடிமது வல்ல் குணமார் பானம்
நடைமுறை மலசல நயம்பல வேண்டும்
நற்சுகா தாரம் நாடிட வேண்டும்

வைத்திய நெறிமுறை வழிவகை பேணி
வாதநோய் வலிமையை மடக்கிட வேண்டும்
நயத்தினைக் கொடுத்திடும் நல்மருந் துண்டே
நாளும் திடத்தினை நாடிட வேண்டும்

ஏற்ற மிறக்க இரத்த அழுத்தம்
எந்த நேரமும் இல்லாமை வேண்டும்
மேற்கொள் சிகிச்சை விஞ்ஞான விழிப்பால்
விலகிப் போகும் வீரிய வாதம்



# சண்டியன் பெருமானம்

அடிபிடி சண்டையெனில் - பெரும்
ஆர வார மெனக்கே!
குடிசையில் வாழ்ந்தாலும் - பல
கூட்டா ளிகளுளரே!

புள்ளிக ளானாலும் - பெரும்
புரட்டர்க ளானாலும்
கள்வர்க ளானாலும் - என்னைக்
கண்டாற் கலங்குவாரே!

ஆயுத வரிசையொடு - கை
ஆட்களும் அதிகமுளர்
போயொரு சண்டையிலே - நான்
புகுந்தால் புகழ்தானே!

கடன் கொடுத் தோர் கேட்டால் - அவர்
கைகளை முறித்திடுவேன்
இடங்கொடுத் தோர் வந்தே - எனை
எழுப்பிட இயலாதே!

கையினில் பணமிலைத்தான் - ஒரு
காரியத் தில் முனைந்தால்
பையினில் பணம் நிறையும் - உடன்
பறந்திடும் பானத்திற்கே!

உண்டியில் உறைபானம் - எனக்
குறுதுணை தரும் ஞானம்
சண்டியன் பெருமானம் - தினம்
தந்திடும் மதுபானம்



அடிகொடுத் தே பலரை - முன்
ஆட்டி அலைத்தேனே
தடி பிடிக் கின்றேனே - என்
தனிமையை உணர்ந்தேனே

குந்தி இருப்பதற்கோ - ஒரு
குந்துக்கும் வழியில்லை
கந்தைத் துணியுடனே - தெருக்
கானில் தவிக்கின்றேன்

கண்டார் கலைக்கின்றார் - எனைக்
காறி உமிழ்கின்றார்
சண்டியன் முன்னே யான் - இனிக்
சண்டா என் தானோ?

மனைவியை மக்கள் தமை - தினம்
வாட்டி வதைத் தேனே
அனைவரும் கைவிட்டார் - தினம்
அடியுதை வாங்குகிறேன்.

# படித்த மருமகன்

என்ரை பெடியனைத்தான் உன்ரை மகளுக்கு
ஏற்கனவே யானும் எண்ணி இருக்கின்றேன்
பின்னாடி நீங்களுந்தான் பேசி வரவேண்டாம்
பெண்ணையும்பின் பார்க்கவொரு பேரும் வரமாட்டோம்!
யோசியாதே மச்சான் உங்கவீடுங் எங்கவீடும்
ஒன்றாகி விட்டதினி ஒன்றும் ஒளிப்பில்லை
ஆசைக் கதையென்றே ஐயம் நீ கொள்ளாதே!

அன்பாய் மருகனுக்குன் ஆதரவை இப்பகொடு
நன்றாய்ப் படிக்கட்டும் நாலுபேர் நன்மதிப்பை
நாளும் பெறுவதோடு நாடட்டும் உத்தியோகம்
இன்றே எழுதிக்கொள, ஏமாற்றம் இல்லாமல்!
எண்ணா யிரம்ரூபா ஈட்டிவிடு நன்கொடையாய்

என்றுசொல்லி ஓர்காலில் என்மச்சான் நின்றாரே!
ஏதோ நடக்கட்டும் என்றே சுபதினத்தில்
சொன்னபடி சீதனமும் சுந்தரமார் பெண்ணினையும்
சுற்றத்தால் சூழ்ந்திருக்கத் தொட்டே எழுதுவிட்டேன்

அன்றோர் விருந்தினையும் ஆரவார மாய்நடத்தி
ஆசை மருகனுக்கே அன்பைக் கொடுப்பதுபோல்
மின்னார்ந்த காற்சட்டை மேற்சட்டை சப்பாத்து
மேலார்ந்த தொப்பியையும் வேண்டிக் கொடத்துவிட்டேன்

சங்கீதம் பாடத் தலையாட்டித் தாளமிடும்
தங்கச்சி அன்றோ தலைநிமிர்ந்தும் பார்க்கவில்லை



எங்களுக் கென்ன இனிமே லவர்பாடே!
என்றாலும் கல்யாணம் எட்டத்தான் போட்டிருக்கே!

பொடியன் படித்துப் பொறுப்பான உத்தியோகம்
போய்ப்புகுந்த பின்தான் பொருந்தும் திருமணமே
கடிதம் வருகிறது காதம் கரைகிறது
காதல் பெருகிறது கர்பபம் வளர்கிறது

வடிவாய்ப் படிப்பதற்கு வாரி இறைத்துவிட்டோம்
வாட்டமின்றி வாழ்வதற்கும் வாய்த்ததுவே உத்தியோகம்
கடிதம் வருவதிலலை காசும் அதோக்திதான்
கல்யாணம் வேறொன்றைக் கட்டிவிட்டார் என்மருகன்

படித்த பரம்பரையிற் பார்த்தாரே பாவையொன்றை
பட்டினியைப் போக்கப் படிகட்டு வேனென்று
அடித்துக் கதைக்கின்றான் அந்தோ எனது மகள்
ஆதார மற்றகொடி யாகித் துடிக்கின்றாள்.



## காதற்கடி!

வாடகை வீட்டில் வந்த
மறுதினம் அடுத்த வீட்டில்
நாடக மாரம் பிக்க
நடிகையை நானே தேர்ந்தேன்
சோடிதான் ஆனால் அந்தச்
சுந்தர நங்கை யாளைக்
கூடியே இன்பங் கொள்ளக்
கொடுத்துவைத் திலனே யானும்

முத்தொளிர் முறுவற் பற்கள்
முறைநிறை முகத்திற் கண்டால்
சத்திலன் கூடத் தம்மின்
தலைதனைத் தாழ்த்து வானோ
சித்தமே பறிகொ டுத்தேன்
செந்தளிர் அணங்கின் சீரில்
வைத்தகண் மூடி னாலும்
மனக்கண்முன் அவளே நிற்பாள்

பக்கத்துப் பருவக் கன்னி
பாதுகாப் புடனி ருக்கத்
தக்கநற் காப்புச் செய்த
தந்தையும் தாயு மென்றால்
குக்கலுக் கொப்பே யாவர்
குரலெடுத் தவர்கள் ஏசின்
அக்கம்பக் கத்து வீட்டார்
அதிர்ந்துபோய் விடுவர் காண்மின்

கண்வைத்து விட்டே னந்தக்
கன்னியின் கவினார் கோப்பில்
எண்ணிக்கொண் டிருப்பே னாயின்
என்னில்முன் வேறு யாரும்



பெண்ணினைத் தூக்கிச் சென்றால்
பித்தனாய்ப் போவே னென்ற
உண்மையை உணர்ந்த யானும்
ஒருநிலைக் பாடுற் றேனே!

என்வீட்டின் ஓட்டி லேறி
இருமியும் செருமியும் யும்பின்
தன்பாட்டிற் பொப்பாட் டொன்றைத்
தாளத்தோ டிசைத்தும் காதல்
என்னாட்டம் புரியச் செய்வேன்
இதற்கெலாம் அவள்நேர் நோக்கே!

ஏறெடுத் தென்னைப் பார்ப்பாள்
இருமினாற் செருமிச் செல்வாள்
வேறிடம் மிரண்டு நோக்கி
வேலியின் அருகில் வந்தும்
கூறிடாள் தன் கருத்தைக்
குணமாரச் சிரித்தே கொள்வாள்
எறிய சட்டை போட்டென்
இதயத்தை ஈக்கும் கன்னி

புன்னகை புரிவ தாலும்
புறநடைப் போக்கி னாலும்
கன்னியின் காதற் பாதைக்
கண்ணுளன் யானே யென்று
என்னையும் திடப்ப டுத்தி
எண்ணாத எண்ணம் எண்ணிப்
பின்னையும் சந்தே கிக்கப்
பிறந்ததே அவளின் மௌனம்

என்னிலும் தவறைக் கணடேன்
இதுகாலும் இதமார் பேச்சை
அன்னவள் முன்வைக் காமல்
அலம்பினேன் சினிமாப் போக்கில்
தன்னிலை இதுதா னென்றே
சடுதியாய்க் கன்னி கூற
என்னதான் கொடுத்தும் பார்த்தேன்
இனியநேர் முடிவே செய்தேன்

எப்படி என்றா லும்யான்
இவள்தனை எதிர்நி றுத்தித்
தப்பித மின்றிப் பேச்சைச்
சாடையாய்த் தொடர வெண்ணி
அப்பனும் தாயும் எங்கோ
அலுவலாய்ப் போன நேரம்
கொப்புள வேலி யேறிக்
குதித்துளேன் கோடிப் பக்கம்

கூடத்தின் முன்னே நின்று
குரைத்தநாய் கோடிப் பக்கம்
ஓடித்தான் வருமே யென்ற
உட்பயம் உலுப்ப யானும்
வீடிக்கு நெருப்புக் கேட்டேன்
மெதுவாக யன்ன லாலே!
தேடிக்கொண் டிருந்த நங்கை
திடுக்குற்றே திரும்பிப் பார்த்தாள்

சத்தமே செய்தி டாதே
சடுதியாய் நாயும் வந்து
தொத்தியே கடித்து என்றன்
தோலினை உரித்துப் போடும்



உத்தர விட்டால் யானும்
உட்புறம் வருவேன் என்றன்
சித்தமே கலங்கி திப்போ
திறந்திடு கதவை யென்றேன்

சித்தமெய்ச் சீற்றந் தன்னைச்
சிவப்பேறு வதனங் காட்ட
முத்தொளிர் வியர்வை சிந்தி
முகப்பரு வோடி லங்கப்
பித்தனே! போடா வென்று
பேதையும் வாயே வைத்துக்
கத்தினாள் கடுகி வந்தே
கடித்தது நாயுந் தானே

மீறிய காதற் போதை
வெறிநாயின் கடியுண் பாதை
சீறியே இரத்தஞ் சிந்தச்
சீவனைப் பிடித்துக் கொண்டு
ஏறினேன் வேலி மீதே!
எப்படி இறங்கிப் பின்பு
தேறினேன் என்றெ னக்குத்
தெரிந்தது சிலநாட் சென்றே!

வீரமா திலகந் தீட்டி
விடுதலை விழிப்பை ஈட்டக்
கூரிய வாயு தத்தாற்
குருதியை எடுத்துக் கொள்ளத்
தூரமே நிற்கும் யானோ
தொடர்பற்ற காத லுக்காய்
ஆரவா ரத்தி னோடு
அதிரத்த தானஞ் செய்தேன்.

# நளாயினி

குழலினிமை யாழினிமை கூர்ந்தே நாதக்
குறைநிறையை ஒப்பிட்டுக்கூறு தற்கோ
அழகொளிரும் காதல் நிறை அன்பார் செல்வம்
ஆண்டுபல சென்றுந்தான் அரும்ப வில்லை
பழமைநெறித் தவமியற்றப் பலமும் இல்லை
பக்திமுறை காபடும்நேர்க் கடன்க ளாலும்
முழுமையுறும் வைத்தியத்தின் சிகிச்சையென்ற
முறையாலும் திருவருளே கூரப்பெற்றோம்

பெற்றுள்ளோம் பெண்குழந்தைப் பிள்ளைப் பேறே!
பேரிட்டோம் நளாயினியென் பெட்பார் நாமம்
பற்றள்ள கோயிலெல்லாம் எடுத்தே சென்றும்
பால்பருக்கிக் காதுகுத்திப் பணிகள் பூட்டிச்
சுற்றத்தார் வருகைதரக் கொணடாப் டங்கள்
சுபதினத்திற் பிள்ளையவள் பேரில் வைத்தும்
கற்றுக்கொள் பள்ளிக்குச் சேர்க்கும் நாளில்
கண்ணாரக் காதார விருந்தும் வைத்தோம்


வைத்த விருந்தாற் செலவு வந்தா லென்ன
வந்தவர்கள் மனங்கோணா திருக்க வேண்டும்
புத்திரியை அன்னவர்கள் வாழ்த்தி நல்ல
புத்திமதி சொல்லி வைத்துப் போக வேண்டும்
இத்தகைய விழாவதனை இதமாய் வைத்தோம்
இன்பங்கண் புஸ்பவதியான போதே
முத்துநகை பட்டாடை அலங்காரச் சீர்
மொய்ந் தொளிரப படம்பிடுத்தும் முகப்பில்
வைத்தோம்.



முகவாட்ட முறச்செய்யும் அகம்வாடாமல்
முன்னேற வேண்டுமெனும் அவாவினாலே
மகள் கேட்கும் பொருளனைத்தும் கடன்பட்டேனும்
வாங்கி வந்து கொடுத்திடுவோம்! மேலும் மற்றச்
சகமான வியருடனே சுற்று லாத்தம்
தடையேதும் செய்யாது தன்னிச்சைக்கே
மகளாரைப் போகவிட்டும் நேரஞ்சென்றால்
வரவேற்போம் வாக்குவாத வழியே கொள்வோம்.

வழியின்மேல் விழிவைத்துக் காத்தி ருந்தும்
மாலையிலே சென்றவளோ மறுநாட் காலைப்
பொழுதேறிப் போயும்தான் வரவே யில்லை
போய்ப்பார்த்து வரவிடமே தெரியவில்லை
வெளியாலே தெரிந்தாலும் வெட்கக் கேடே
வேதனையோ தாங்கமுடி யாதுகாலை
வெளியான பத்திரிகைச் செய்தி சொன்ன
விடயத்தில் நளாயினியென் மகளைக்கண்டேன்!

கண்டேன்முன் தலையங்கக் கட்டுக் கோப்பை
காளையர்கள் கூட்டமொடு ஹொட்டல் தன்னில்
கொண்டாட வைத்திருந்த குமரிக்கூட்டத்தில்
குணமார்ந்த நாளயினியும் கைதாமென்றே
மண்டைக்குள் சம்மட்டி கொண்டடிக்கும்
மாதிரியும் மாரடைக்கும் விதமும் பூமி
எண்டிசையும் சுற்றுகின்ற நிலையும் கண்டேன்
ஏங்கியிடி விழுந்தாற்போல் இடத்திற் சாய்ந்தேன்.



# அரசாங்க வேலை

படித்தவரின் பெற்றோரைப் பராம ரிக்கப்
பலமாந்த நன்கொடைச்சீர் முதற்கண் வேண்டும்
கொடுத்து வரும் தரகருக்கு முன்னும் பின்னும்
சொல்லிற்குத் தகுந்ததொகை கொடுக்கவேண்டும்

அடுத்துவரும் மாப்பிள்ளைக்கு அன்பைக கூட்ட
அழகான கல்வீடு காணி ரொக்கம்
வடிவான உடற்கட்டு குணத்தின மாட்சி
மாற்றுவிடாத் தங்கநகைப் பொலிவும் வேண்டும்

தங்கநகை தாளநகை தலைகால் கொள்ள
சங்கையுறும் ரொக்கமுமோர் பதினைந்தாகும்
பங்கமையாக் கல்வீடு காணிர மற்றும்
பராமரிப்பு நன்கொடையும் தரகர் கூலி
தெங்குநிறை சிறுதோட்டம் வயலும் வீட்டுத்
தேவைக்குச் சீராந்த தளபாடங்கள்
எங்களுக்குப் பின்பென்றே வசனங் காட்டா
தெழுதிவிட்டேன் என்மகட்கும் இணைந்தோனுக்கும்

என்மகனின் குணநலத்தை ஏற்றிச் சொன்னால்
ஏதோவோர் சூதிருக்கென் றியம்புவீரே!
அன்னவளைப் பற்றியென்றன் அயலிற் கேட்டே
அவ்வளவு சீதனமும் போது மென்று
முன்னிலைக்கண் பெண்பார்த்தே முடிக்க வந்தான்
முன்னிற்க தரகர் சொல் முறைதானென்றே
அன்னவரைப் படித்தவராய்க் கருதினேன் யான்
அவர் கொழும்பில் அரசாங்க வேலை யாளாம்.



அரசாங்க வேலையென்றால் ஆச்சிக்குத் தான்
ஆசைவரும் பின்னுமொரு விவாகம் செய்ய
வருமானம் குறிப்பிட்ட தொகை யானாலும்
மாதாந்தம் கிடைக்குமெனும் வாஞ்சை தானே?
மருமோனும் வந்துவந்து மகிழ்ந்து போவார்
மாதாந்தம் இங்கிருந்து பணமும் போகும்
கரவோடத் ஜடள் தொடங்கியது எனக்குப் பின்பு
காரேற்றிப் புறப்பட்டேன் கொழும்பு நோக்கி

புறப்பட்டேன் என்மருகன் பொருத்திச் சொன்ன
போட்டுக்கு முன்பாக நிப்பாட்டு என்றேன்!
கறுப்புற்ற சட்டையணிந் தொருவன் எங்கள்
காருக்குள் இருக்கின்ற சனங்கள் தம்மை
இறக்கட்டோ ஏற்றட்டோ நேரம் போக்க
இப்பொழுதே யாழ்தேவி ஏகு மென்றே
திறந்துற்ற கார்க்கதவின் அருகே வந்தான்
திடுக்குற்றேன் அவனுந்தான் திகைத்தே நின்றான்



## பட்டொளி வீசிப் பரந்தது

பரிதி யின்கதிர் பட்டொளி வீசுமுன்
பறவை யின்னிசைப் பாட்டுப் பரந்ததே!
சிரம முற்றுமுன் நித்திரை செய்தவன்
செவி மடுக்க இமைகள் விரிந்ததே!
கரமெ டுத்திறைக் கஞ்சலி செய்தவன்
கழனி தேடிக் கதிர்கள் எடுத்தனன்
தரமெ டுத்திது சாற்றிடு வோமெனில்
தரணி வாழ்வுக் கொருவனே ஆகினான்

வாழவழி வகுப்பதற்கே மார்க்கந் தன்னை
வரையறுத்துக் கூறமுடி யாது பாரீர்
வீழுகின்ற சருகெனினும் வாழ வைக்கும்
விளைவுதரும் பயிர்களுக்குப் பசளை யாயே!
ஆளுகின்ற அரசுமுதல் பிரசை யாவும்
அமைதியுடன் வாழ்வதற்குப் பொருளா தாரம்
சூழவழி காண்பதற்குத் தொழிலைக் காத்துச்
சுபீட்சமுடன் வாழ்வினிலே ஒளிகொள் வோமே!

கொற்றவனும் உயர்வதற்கே வரம்பை ஏத்தக்
கூறினரே ஔவையரும் உழவின் மாண்பை
மற்றவனைக் காத்திடுநற் றொழிலைப் பேணி
மங்கலமாய் வாழ்வினிலே ஒளிகொள் வோமே!
பற்றுமிகும் பயிர்வளங்கள் பரவி யோங்கப்
பாரிலுள்ள தரிசுகளைப் பதமே செய்வோம்
கற்றுவரும் கலைகளுடன் தொழிலும் கற்றே
கண்ணியமாய் வாழ்வினிலே ஒளிகொள் வோமே!.

ஒருவ னாலொளி வரவு மாபுவி
உழவி னாலுயர் வோங்குமே!
திருவி னாலொளி திகழு மேபுவி
தெரிகுவோம் செய லாற்றுவோம்

பருவ காலமும் மருவு போகமும்
பசுமை யாலொளி பரவவே
தருகு வோம்தளை பயிர்க ளைத்தினம்
தவறி டாதநற் பணியினால்

பட்டொளி வீசிப் பரந்தன பாரீர் பலகொடிகள்
பாங்கொடு தத்தம் நாட்டுடைவளத்தைப் பகர்ந்திடவே
கட்டழ கொடுநம் ஈழக் கொடியும் கலகலெனக்
காட்டிய தெம்வள நாட்டுடைச் சின்னம் தானெனவே!
தொட்டதென்நெஞ்சம் சுற்றிய தேநம் நாட்டினையே
தோன்றின நற்பல கழனிகள் தொழில்கள் பயனுடனே!
மட்டில மகிழ்ச்சி கட்டிய கையை உயர்த்திடவே
வணக்க முடன்வாய் நமோ நமோவென வாழ்த்தியதே!

காடும் கலடும் கரடியும் புலியும் கனவிலங்கும்
காணும் காலம் கடந்துமே பாடொடு கவினாக
வீடும் விளக்கும் வீதியும் செந்நெல் விளைநிலமும்
விரையா மழைநீர்த் தேக்கமும் பலபயிர் விருத்திகளும்
தேடும் செல்வச் சிறப்பொடு திகழும் ஈழமதின்
தேசக் கொடியே தினமும் மற்றோர் உள்ளமதை
நாடும் படியாய்ச் சமநிலை தன்னை நிலைநாட்டி
நன்னெறி பட்டொளி வீசிப் பரந்தது பாரீரே!

ஒன்று பட்டொளி வீசுவோம் - உண
வொன்றி யேபணி யாற்றுவோம்
அன்பை ஊட்டிட நாட்டினில் - பல
ஆக்க வேலைகள் செய்குவோம்.
முன்பு விட்டகு றைகளை - முழு
மூச்சு டன்நிறை வாக்குவோம்
நன்றி காட்டம றந்திடோம் - நெறி
நாட்டி யேகவி சாற்றுவோம்.

# எழுத்தறிவித்தவன்

சுட்டுவிரல் தொட்டெழுதத் தூண்டுமுதல் விட்டவனே
பட்டமெனும் வட்டிக்கும் பங்குளனாம் நட்டமில்லை
விட்ட முதலுக்கு மெய்யன்பு நன்றிதனை
இட்டமுறக் காட்டுவதை ஏற்றமென்றே கொள்வோமே

சொல்லிச் சுவைத்தே சுவைக்கத் தருகின்ற
நல்லோன் நமதாசான் நற்றுணையே! எல்லாம்வல்
ஈசன் எனக்கருதி எண்ணுவதால் எங்கட்குத்
தோசமில்லை அன்னவனின் தொண்டாற் றுலங்கிடுவோம்

அங்கக் குறைவுளரும் ஆராய்ந் தெழுத்தறிய
எங்கும் நிலையங்கள் இன்றுளதே! அங்கங்கே
ஆசிரியன் ஆதரவாம் ஆக்கத்தா லெத்தனைபேர்
தேசுற்றார் கல்விதனில் தேர்வுற்றே செம்மையுற்றார்

அழுத்தி எழுதிவித் தானொரு ஆசான் அருவரியில்
அழித்தும் அழுதும் எழுதியே ஆற்றி வாக்கமுற்றோம்
எழுத்தறி வித்தவன் தன்னை இகத்தினி லீசனென்றே
பழுத்த கிழவியும் பாங்குறச் செப்பினள் பாடலிலே

பாடலி லுற்றதும் பாங்கிலை யென்றே பகர்வதற்குத்
தேடிடு வார்புது மார்க்கமே திட்டிற் திறமையுள்ளார்
போடிடு வேடப் புதுமையைப் பார்த்தே புகழ்பவர்க்கு
ஏடறி வாற்றலே இல்லை எழுத்தறி வெப்படியோ

எப்படி வந்ததே முத்தென ஆய்ந்தே இயம்புவரேல்
அப்படி இல்லையெ னப்புகல் வாரே அதிகமுளர்
செப்படி வித்தைகள் செய்வதி லும்முயர் தேர்வினிலும்
கொப்பி அடித்திடும் குள்ளக் குணங்களே கூடியதே!



கூடிக் குரைப்பதும் குத்திக் கதைப்பதும் கும்பலிலே
ஆடிக் களிப்பதும் தேடிக் குடிப்பதும் அந்தரமாய்
ஓடி விழுவதும் ஊரார் நகைத்திட ஓர்மமுற்று
தேடி அடிபிடி செய்திடும் தீமைகள் சென்றிடுமோ

சென்றகா லத்தினிற் றிண்ணையிற் சீருறச் சேர்ந்தகல்வி
இன்றுவே றாகிட எற்றமார் பக்தியி லாததுவும்
அன்று குருசீட ரென்ற முறையின்று அற்றதுவும்
ஒன்றி உலைக்குது ஓதியு ணர்த்தியும் ஓர்ந்திலரே!

மடங்களுமில்லை மாணாக்கர் குருவை நன்கு
மதிப்பதில்லை மாட்சிமிகும் கல்வி யில்லை
படக்கதையும் பல்லிளிக்கும் பகடி பார்வை
பரந்ததனால் பக்குவஞ்சேர் பான்மை இல்லை
கடைத்தெருவில் கண்டபடி பொழுது போக்கு
கன்னியரும் காளையரும் காதற் பேச்சு
விடக்குடிப்பு வில்லங்க உயிரே மாய்ப்பு
மிகுந்ததல்லால் மேன்னிலைக்கோர் விதியே காணேன்

சத்தியத்தைச் சாந்தமன்பைச் சார்வா ரில்லை
தன்தவறைச் சாற்றிநெறி கொள்வா ரில்லை
முத்திரையில் லாதுமொட்டைக் கடிதம் போடும்
முதுகெலும்பு அற்றமுறை முனைவும், நல்ல
மித்திரரைப் பிரிப்பதற்குச் சூழ்ச்சி செய்யும்
விஷமிகளும் இல்லாம வில்லை அந்தோ
இத்தரையில் என்னென்ன கொடுமை எல்லாம்
எளிதாகச் செய்துயிடர் விளைக்கின் றாரே!



# காலம் மாறுமா?

சென்ற காலமும் சேருங் காலமும்
சிந்த னைதனிற் கொள்ளவே
நின்று லாவுமிக் கால மேநெறி
நிர்ண யிப்பதற் கோர்வெளி

காலம் மாறுமா கஷ்டம் நீங்குமா
கைக ளிற்கனம் காணலாகுமா
ஓல முற்றுயாம் ஊரைக் கேட்டிடில்
உன்னைக் கேளென ஊருரைக்குமே!

கற்காலம் பொற்காலம் கண்டுவந்த விஞ்ஞானம்
தற்காலம் தந்தஅணுச் சக்திப் பெருங்காலம்
நற்காலம் நாம்பார்க்க நாடிக்கை நீட்டி நிதம்
புற்கோல மாகிவிட்டடோம் பொற்கோலம் எப்பொழுதோ

சந்திரனிற் கல்லெடுத்தே தாரணிக்குக் கொண்டுவந்து
சிந்தனைக்கு ளேபதித்துத் தேர்வுபெறும் இக்காலம்
மந்திரத்தால் மற்றவனை மாய்க்க வழிதேடி
அந்தரமாய்ச் சுற்றுமுறை அற்றொழிதல் எக்காலம்

விண்ணகத்தை ஆய்வதற்கே வீரமில்லை ஆனாலிம்
மண்ணகத்தை மாண்பாக்க மார்க்கமில்லை யோநமக்கே
உண்பதற்கே ஒன்றுமின்றி ஓயா துறங்குகின்றோம்
கண்திறந்தே நாடுதனைக் காப்பதுதான் எக்காலம்



வீட்டில் விளக்கேற்ற வேறொருவர் கைபார்த்தே
நாட்டைக் கெடுத்துவிட்டே நாளும் அலைகின்றோம்
ஏட்டைப் புரட்டியுந்தான் என்னபயன் சாதித்தோம்
காட்டும் அறிவொளியால் கைக்கொள்வோம் நல்லொளியே

பட்டினியைப் போக்குதற்குப் பாதை தெரியாது
கொட்டுகிறோம் கண்ணீரே! கூடிக் குளறுகிறோம்
தொட்டுளமா நம்வீட்டைச் சுற்றியுள்ள மண்ணதனை
விட்டகுறை பாடுதனை மேவுதல்தா னெக்காலம்

தன்காலம் இன்னதென்று தானறியாச் சாத்திரிமுன்
என்காலம் எப்படிப்பார் என்றே கரம்நீட்டி
நன்றாகச் சொல்லிவிடின் நாலுபணம் கூடவைத்தும்
பின்வாங்கும் பேர்களுக்குப் பிற்காலம் எப்படியோ

நல்லறிஞர் சொல்நெறியை நாடாமல் நக்கலெனும்
கல்லெறியால் கண்டனஞ்செய் காலமிதே கஷ்டங்கள்
சொல்லமுடி யாதுதினம் சூழ்ச்சிகளோ மாகொடிது
நல்லதிற்குக் காலமில்லை நாணயமும் சற்றுமில்லை

நம்பிக்கை மோசடியும் நன்றியற்ற நச்சரிப்பும்
இம்சிக்கும் இன்னலும்சேர் ஈரமற்ற இக்காலம்
தம்பிக்கும் அண்ணனுக்கும் சச்சரவை மூட்டுதற்கு
வம்பழக்கும் வஞ்சனைகள் மாழுவது எக்காலம்


சீதனமும் சாதகமும் தேன்னிலவின் பின்பார்க்கும்
காதலதே முன்னீமும் காலத்தின் கோலமதால்
ஆதரவே சற்றுமின்றி அங்குமிங்கு மாயலையும்
பேதைகளே பெற்றோர்க்குப் பெற்றிதரல் எக்காலம்

தேர்தெடுக்கும் மாப்பிளைக்கும் சேர்ந்தவர்க்கும் நன்கொடையும்
சாந்த தரகனுக்குத் தண்மையெழத் தாள்க்காசும்
நேர்ந்துவைத்தும் பெண்வீட்டார் நிம்மதியே சற்றுமின்றிச்
சேர்ந்திருக்கும் இக்காலத் துன்பமறல் எக்காலம்

பக்தியுற்றுச் சித்திபெறப் பாங்கான அன்புமில்லை
சித்தசுத்திச் சீருமில்லைச் செய்பணியிற் செம்மையில்லை
புத்தியற்றோர் போல்நடித்துப் பொய்பரளிப் பூசவினால்
நித்தியமும் இன்னலெழும் நீசமறல் எக்காலம்

உன்கரத்தை நீயுயர்த்தி உற்சாக மாயுழைப்பின்
பொன்பரப்பிப் பூரிக்கப் பொங்கிவரும் நற்காலம்
முன்னுரப்பிப் பின்னரக்கும் மூச்சற்ற கொள்கைவிட்டே
அன்பிரக்கம் ஆக்கமுற்றே ஆதாரம் தேடிடுவோம்

காலத்தை யாமுணாந்தே கட்டுப்பா டாய்நடந்தால்
சீலச் சிறப்பாரச் சேரும் எதிர்காலம்
மூலைக்குள் நாமிருந்தால் முன்னேற்றம் வந்திடுமோ
ஞாலத்தை ஆராய்ந்தே நற்காலம் பெற்றிடுவோம்.





# இனியொரு விதிசெய்வோம்

முனிவரே முனைந்து யாத்த
முப்பாலின் முறைக்கு மூப்பாய்
இனியொரு விதியை ஈட்டல்
இயலுமோ? இதந்தா னுண்டோ!
கனிவுறும் குறளே காட்டும்
கருத்தினைக் கவினே ஊட்டும்
மனிதரே மறைந்தோர் பாட்டில்
வஞ்சனை வளர்க்கின் றாரே!

புதுப்புது விதிகள் யாத்துப்
புரட்சியைப் புலரச் செய்தே
சதிக்குமேற் சதிகள் சாடிச்
சங்கடப் படாது மூத்தோன்
விதித்தநற் குறளை, புத்தர்
விளக்கிய அன்பை, காந்தி
பதித்தசீர் அகிம்சை வாய்மை
பரவிடப் பாரில் வாழ்வோம்

கனிவகை கிழங்கு கீரை
காடுறை மிருகம் பட்சி
இனிவுற உண்டே தம்மை
இயற்கையோ டிணைத்த அந்த
மனிதரின் வழிவந் தோரே
மாடிகள் மனைகள் கட்டிக்
குனிவிலா வாழ்ந்தே என்றும்
குதிக்கிறார் கொள்கை அற்றே!

பொன்னியை அடைத்துப் பூட்டிப்
புன்மைசெய் பொறாமை யென்னும்
கன்னியை வலிந்தே கட்டிக்
கஞ்சத்தை மகவாய்ப் பெற்றே
மின்னியும் மறைந்தும் மேலும்
வேகமாய் இடியி டித்தும்
இன்னலே இயற்று கின்றார்
இதற்கொரு இடந்தா னெங்கே

விளம்பரம் விரிவாய்த் தீட்டி
விரதங்கள் காப்போர், தங்கள்
பழம்பரம் பரையை நாட்டிப்
பதவிக்குப் பலமே கொள்வோர்,
வளம்பல பெற்றும் தம்மை
வறியராய்க் கணிக்கச் செய்வோர்
நுளம்புக ளாவர் நல்ல
நுண்மைநோக் கிவர்கட் கேது

ஒருவிதி உணர்ந்தே மக்கள்
ஒருவனை உயர்த்தி விட்டால்
சரிவர நடவான், மேலும்
தனக்கொரு விதியே செய்து
பெருநிதி சேர்த்துப் பின்பு
பெருமதி யுளன்தா னென்றே
பொருதுவான் இந்தப் புன்மை
பொடிபடப் போதங் கொள்வோம்

களைப்பின்றி வேலை செய்யக்
கைலஞ்சம் கொடுத்தென் றாலும்
முழுப்பலம் கூட்டி நிற்பார்
முறையான கல்வி யற்றார்!



ஒழுக்கமாய் இருப்போ ருக்கும்
உலைவைத்தே உயர்ச்சி யுற்று
உழைப்பிலும் மேலாய் ஆங்கே
ஒதுக்கியே ஊறைச் செய்வார்

மனிதரின் மதியி னாற்றான்
மதிதனை அடைந்தார் மண்ணோர்
மனிதரின் மதியி னாற்றான்
மழலையின் மொழியைக் கூடத்
தொனிசெயும் ஒலியெ ருக்கி
தூரத்தை பார்க்கும் சக்தி
இனிவரும் ரேடி யோமின்
இணைப்பமை ஒளியும் கண்டோம்.

இனியோர் விதிக்கே
எதிரார் எவருமின்றி
புனித முறும்வழியைப்
பொற்பாரக் கொள்ளுவமே!

வாழ்ந்துவரும் நாட்டினையே
வண்மை வளமாக்க
கீழ்மைக் கணங்களையும்
கீர்த்திப் பொருளுணர்வோம்

இனமதபே தங்களினால்
ஏற்பட்ட இன்னல்
மனமுறிவு மாறுதற்கு
மார்க்கங்கள் செய்திடுவோம்

பிஞ்சுகளின் உள்ளத்தில்
பேதம் வளர்த்துவிடின்

நஞ்சாகும் கொள்கைகளே
நாட்டில் நடமாடும்

கொஞ்சமெனும் பேதமெழக்
கூறும் கருத்துகளை
எஞ்ஞான்றும் ஏற்கா
திருக்க விதிசெய்வோம்

அந்நியரின் ஆட்சி
அடக்கு முறையழிய
இந்நிலத்தோர் ஆண்ட
இயக்கமுறை ஈட்டிடுவோம்

நாட்டை வளமாக்க
நாட்டியநற் பாதைகளைக்
கேட்டுக் கிரகிக்க
கீதங்கள் யாத்திடுவோம்

சூழ்ச்சியினால் ஆட்சிபற்றல்
சுரண்டித் துயர்செய்தல்
வீழ்ச்சியுற நல்ல
விதிகள் விளக்கிடுவோம்

அண்ணனொடு தம்பிமுன்னே
ஆட்சிக் கடிபட்டே
மண்ணில் மதிப்பிழந்த
வாழ்க்கைமுறை சொல்லிவையோம்

வண்மையுறச் சோதரர்கள்
வாழ்வதற்கே வாய்ப்பான
எண்ணங்கள் ஏற்றமுற
இன்விதிகள் செய்திடுவோம்



மண்ணுக்கும் பொன்னுக்கும்
பெண்ணுக்கும் ஆசையுற்றே
கண்ணுக்குள் மண்தூவும்
காதகர்கள் கண்கலங்கி
உண்மை நெறியுணர
உள்ளத்தில் ஆன்மீக
எண்ணம் இதமார
ஏற்றவிதி செய்வோமே!

அன்பால் விளைவுற்ற
ஆதாரக் காதலர்கள்
இன்பார வாழ்வதற்கு
ஏற்றவிதி செய்வோமே!

ஆண்களுக்கும் பெண்களுக்கும்
ஆசார சீலங்கள்
யாண்டும் இடம்பெறசெய்
ஏற்றவிதி செய்வோமே!

வஞ்சனைக்குப் பஞ்சுமெத்தை
வாழ்த்தே வழங்காமல்
நெஞ்சொழுக்க முற்றிடவே
நேசவிதி செய்வோமே!

தந்தையைப் போல் ஆணொன்றும்
தாயைப்போல் பெண்ணொன்றும்
தந்துவிட்டாற் போதுமென்றே
சாமியையாம் கும்பிவோம்

இந்தவிதி ஏற்றமுற
எல்லோரும் கைக்கொண்டே

சந்ததமும் சங்கடங்கள்
சாராது வாழ்ந்திடுவோம்

அடிமட்டம் மத்தி அதிலுமுயர் மட்டம்
வடிவத்தால் வந்ததல்ல மார்க்கம் - படிதன்னில்
கல்விபொரு ளாதாரம் கண்டே கணித்தார்கள்
நல்லாய்ந்தே கொள்ளல் நயம்

தாழ்ந்தோரும் கல்வித் தகைமைதனில் மேம்புற்றால்
சூழ்ந்தே உறவுகொள்வர் தூயவரே - ஆழ்ந்தாய்வே
கொள்ளுவதால் பேதங்கள் கூனிக் குறுகிவிடும்
கொள்ளுகநற் கல்விபொருட் கூர்

ஆசிரியை ஆகிப்பின் ஆக்கமுயர் கல்விசொலத்
தேசுநிறை மாணவியாய்ச் சேர்ந்தீர்கள் - தோசமில்லை
கற்றே கொடுக்கும் கவின்முறையே கைக்கொள்வீர்
பற்றும் சுபவிதியே பார்

பட்டங்கள் பெற்றும் படிப்பித்தற் பாங்கறியா(த)
மட்டங்கள் உள்ளாநம் மத்தியிலே - திட்டமதாம்
கல்வி புகட்டுதற்கே கற்றுத் தெளிகின்றீர்
நல்லபணி செய்வீர் நயந்து

ஆனால் ஒருவிதியை ஆணித் தரமாகப்
பேணும் படிசொல்வேன் பெண்மணிகாள் - மானமுறும்
நாணம் மடமச்சம் நற்பயிர்ப்பு நாற்குணங்கள்
காண நடப்பதுவே கண

பெண்கள் பிழைவிட்டால் பேடியுமோர் பேச்சாளன்
திண்மைத் திடம்பெற்றுத் திட்டுவனே - உண்மையுண்மை
வாழ்வை வளமாக்கும் மாசக்தி மங்கையரே!
தாழ்வுக் குணங்கள் தவிர்.



## ஒருமைச்சீர்

ஊற்றுப் பேனா ஒளிர்முனையும்
உள்ளிருந் தூறும் ஒற்றுமையும்
ஏற்கும் எழுத்துக் கிசைவாயின்
இதமார் ஒருமைப் பாடாகும்
ஆற்றல் அத்த அறிஞனுக்கே
அன்பில் லாதாள் மனைவியெனின்
நாற்றைப் பூச்சி யரிப்பதுபோல்
நச்சரிப் பிருக்கும் நாளாந்தம்

மலைதனில் மலரும் தேயிலையும்
மடுவளர் கரும்பின் சீனியதும்
உலைதனில் கொதிக்கும் வெந்நீரும்
ஒன்றின் கோப்பை ஒன்றினிலே
நலமெனப் பருகிச் சுவைகண்டே
நயந்தோம் தேனீர் நாடென்றே
இலையித மூட்டத் தேய்வதினால்
இட்டன ரோதே யிலையென்றே!

தீட்டித் தலையங் கத்தினிலே
தேனீர் விருந்துப சாரமெனக்
காட்டி யழைப்பர் கவினாகக்
கலந்துரை கனியச் சுவைத்திடுவார்
பேட்டிக் கமர்ந்தோர் பேச்சின்முன்
பேசிடும் தேனீர் பெருமையுடன்
நாட்டின் செல்வம் நமக்கெல்லாம்
நல்லொரு மைதனை நல்கிடுமே!

கொப்பிற் றொங்கும் குளிர்காயும்
குலையிற் குலவும் தேங்காயும்
துப்புக் கடலில் விளையுப்பும்
தடித்த மரத்துச் சடைப்புளியும்
ஒப்பம் போட்டொன் றாகவில்லை
ஒவ்வொன் றாக நாம்தேடிச்
செப்பிச் சுவைக்கும் கறிசெய்தோம்
சேரும் ஒருமைச் சீரைப்பார்

காவிய மோவியம் கதைகவிதை
கட்டுரை கனிவுரை நாடகமும்
மேவிடப் பற்பல விளக்கங்கள்
விரிக்கும் வித்தகப் பத்திரிகைச்
சேவையி னாலே சீரொருமை
திகழச் செய்தல் திருப்பணியே!
நாவினை நகர்த்தும் நன்மையினால்
நாட்டினுக் கொருமை நயக்கச்செய்

வழிக்குத் துணையாய் ஒளியிருக்கும்
வாழ்க்கைத் துணைக்கே அன்பிருக்கும்
மொழிக்குத் துணையாய் நெறியிருக்கும்
மூட்டும் பணிக்குப் பலமிருக்கும்
விழிக்குத் துணையாய் இமையிருக்கும்
விதத்தில் நாட்டுக் கமைச்சிருக்கும்
செழிக்கும் செம்மைத் தேசியம்
சிறக்கும் ஒருமைச் சீரினிலே!



# இளம் பிள்ளை வாதம்

வைரஸ் என்னும் வகைக் கிருமியினால் - இளம்
வாதநோய் வந்தது காணீரே - இது
பரவிப் பெருகியே பாலர்கள் வாழ்வினைப்
பங்கப்படுத்தலைப் பாரீரே.

மூளை யிலுள்ளணுக் கூடுகளை வைரஸ்
முட்டிப் பெருந்தாக்குத் தாக்குவதும்
முதுகு நரம்புக் கொடியணுக் கூடுகள்
முனைந்து வைரஸ் மோதுவதும்

ஜீவனுள்ள அணுக் கூடுகளில் வைரஸ்
சேர்ந்து வாழ்ந்து ஊறு செய்வதும் சேர் (ந்து)
சிறுபிள்ளை வாதநோய் தென்படுங்காண் - இவை
திகழ்வதின் முன்செய் சிகிச்சைதனை.

காய்ச்சல் தலைவலி நோவுதசை நார்வு
கண்மயக் கம்வாந்தி மாந்தகுணம்
நோச்சல் மலச்சிக்கல் நோவுதொண்டை - இந்
நோய்க்கு அறிகுறி காணீரே


சக்தி குறைந்தநுண் கிருமிக ளைக் கொண்ட
நோய்த்தடைப் பாலினை ஊசியினால்
மிக்க கவனமாய் மேனியி லேற்றியும்
மேலு மொருவழி கண்டிடுவீர்

மிட்டாய் உருவத்தில் மெல்லும் பாணித்துளி
விட்டு மூன்று சொட்டு மென்றிடுவீர்
மட்டாய் இரண் டொன்று மாத இடைவெளி
கட்டாயமா யுண்டு காத்திடுவீர்

தொற்றிடும் வாதநோய் பற்றியவர்களைச்
சற்றும் நெருங்கிப் பழகாதீர் - இது
முற்றிடும் போதுமுன் வாதநோய் தீர்ந்திடும்
கற்றறி வாளரைக் காணீரே

வாதநோய் வந்துற்ற வாரம் மூன்றுஎல்லை
வண்மைத் தொழில் செய்து வாடாமல்
சாதகமாய் உடல் தண்மை பெறும்வரை
தங்கித் தனிஇடம் சார்ந்திடுவீர்

நெருங்கிப் பழகிடும் நேச உறவினர்
நித்தமும் நீர்கொண்டு சுத்திசெய்து
மருந்து அருந்தியே வாதத் தடைசெய்து
பொருந்திச் சுகாதாரம் போற்றிடுவீர்!





## இலட்சியம் எங்கே?

புதுவருடத்தைத் தொட்டுப்
புனிதமாய் வாழ வேண்டும்
இது, எது யாவும் இன்றோ
டேகட்டும் என்று எண்ணி
மதுதனை நிறைய மண்டி
மச்சமா மிசமும் உண்டு
குதுகல மாகச் சூதும்
கொள்ளுவான் முதனாள் தானே!

கதிரவன் எழுந்து வந்தே
காட்டினான் வருடந் தன்னை
விதிமுறை விளங்கு வோர்கள்
மேற்கொண்டார் கடமை தன்னை,
மதுவெறி யோடும் சூதில்
மன்னிய முதனாள் மன்னன்
புதுவரு டத்தைக் கண்டான்
பொழுதது சாயும் போதே!

துடிதுடித் தெழுந்தான், சோர்வைத்
தொலைத்திட மார்க்கந் தேடி
கடிதினிற் சென்றான் கள்ளுக்
கடவுள் இருக்கும் கூடம்
பிடிபிடி என்றே சொல்லப்
பிரியமாய்ப் பிளாவில் ஏந்தி
அடியடி யாக உண்டே
அடைந்தனன் ஆண்மை தன்னை

தள்ளாடித் தடைகள் போட்டுத்
தமக்குளே தர்க்கம் செய்தும்,
வெள்ளாடு கடித்தல் போன்று
மிகுபல பண்டம் உண்டும்
உள்ளாடும் உயரத்தோனும்
உருவமே மாறிப் பொங்கத்
தில்லானாப் பாட்டுப் பாடித்
தெரிசனம் செய்தான் வீட்டில்

ஓட்டிய வயிறி னோடும்
ஊத்தைசேர் உடுப்பி னோடும்
கட்டிய மனையாள், மக்கள்
கதியிது எமக்கே யென்று
கொட்டிய கண்ணீ ரோடு
குறாவிடும் போதில் அந்தத்
துட்டனும் துடிக்க வைத்தான்
சோற்றினைத் தாடி என்றே!

★

இலட்சியம் எங்கே எங்கே
இரக்கமும் இவனுக் கெங்கே
அலட்சியம் மிகுதி யல்லால்
ஆக்கமே அவனால் இல்லை
மலர்ச்சியை அடைய மாந்தர்
வகுத்தநற் றிருநாள் தன்னை
கலைச்சுவை யோடும், இல்லக்
களிப்போடும் கருது வோமே!



# தேசிய செல்வம்

மண்ணைத் திருத்தி மணியைப் புகுத்தி மறுபெயர்க்கும்
உண்ணக் கொடுக்கும் உழைப்பாள ருக்க உதவிதனை
எண்ணிப் பெரும்பொங்க லென்றும் இயற்றியே இந்நிலத்தின்
கண்ணே உழவென்று காப்புக் கனத்தினைக் காட்டுவமே!

பெட்டிப் பணத்தினைக் கொட்டிப் பிரையாசப் பேர்வயலால்
நட்டம் அடைந்திடு போதும் நலிவுறார் நல்லுழவோர்
வட்டி கொடுத்தெனும் மற்றோர் பணத்தினை வாங்கியவர்
கெட்டித் தனத்தொடு கீர்த்திப் பெருந்தொழிற் கேகுவரே!

கட்டழ காகிய காயத் திருந்தே கனவியர்வை
கொட்டி உழுதிடு வார்முதல் கொள்ளும் குளிர்மழையாய்
ஓட்டி உலர்ந்திடும் உந்திக் குதவிடும் உத்தமர்கள்
தட்டி எழுப்பிடு வாருல கத்தினைத் தம்வசமே!

வெய்யிற் கொதிப்பினில் பெய்யும் மழையில் மிகுபனியில்
மெய்யும் மெலிந்திடக் கையும் வரண்டிடு வேளைதனில்
வையத் தகம்விளைந் துய்வை வழங்கிடும் மாபயிர்கள்
கையில் தரும்கதிர் கண்ணைத் துடைத்திடும் காதன்மையோ

ஊரெங்கு மூக்கமாய் உற்பத்தி ஈட்டுநல் ஒற்றுமையால்
பேரின்பம் ஓங்கியே பேதமும் நீங்குமப் பெற்றியதால்
பாரெங்கும் பண்புமெய்ப் பாங்கும் பலமும்நேர்ப் பக்தியெழும்
சேருங்கள் தேசிய செல்வம் திகழ்வுறச் செய்வதற்கே!

# புற்றுநோய்

பெருகிடும் அணுக்களின் பேதத்தினாலே
பிறந்திடும் புற்றுநோய் தானே

ஒருசில உற்பத்தி அணுக்களின் பெருக்கால்
ஊறடையும் சுக அணுக்கள்
மருவியே உடலுள் கட்டி வளர்ந்து
பெருகுவது புற்று நோயே

வாயிலும் மார்பிலும் வளர்தசை நாரிலும்
வளர்ந்திடும் புற்று நோயே
தாய்வழி வந்த நோயிது வன்று
தவிர்த்திடும் வழிதனைக் காணீர்

வெற்றிலை பாக்கு புகையிலை மீதி
நித்தியம் குறைத்திடு வீரே
சக்திசெய் அணுக்களைச் சரிசமன் செய்யும்
வைத்திய முறை கொள்வீரே

பற்களின் ஈறு பழுதுடைப் பல்லு
படையெழு சுண்ணாம்பு அழற்சி
உற்றிடலாலே நாக்கிலும் சொக்கிலும்
பற்றிடும் புற்று நோயே



வயிற்றினில் மாந்தம் மலத்தினில் லிரத்தம்
வந்துறும் சீதக் கழிச்சல்
மார்பினிற்கட்டி காம்பினி விரத்தம்
வடிந்திடும் துண்ணீர்ப் பெருக்கம்

நிறைதனிற் குறைதல் நீர்வழி யோனி
நிலையில்லா இரத்த ஓட்டம்
மறைவினுள் காயின் மச்சத்தின் பருப்பம்
மலங்கழி வழக்கத்தில் மாற்றம்

நிரந்தர இருமல் நீள் குரலடைப்பு
நிறந்தனில் மாறுதல் காணீர்!
வருந்திடும் புற்றுநோய் வந்தது கண்டீர்!
வைத்திய முறையினை நாடீர்.

சத்திர சிகிச்சையும் மின்கதிர் சக்தியும்
தகர்த்திடும் புற்று நோயை
வைத்திடும் ரேடியம் வைத்திய முறையால்
வாழ்ந்திடு வீர்சுக வாழ்வே!

# பொய்விளைவாலே மாழையில்லை!

நெல்லு விளைந்ததோ?
　　இல்லை, இல்லை
நேற்றிங்கு வந்தது?
　　நேரெதிர்ச் சப்பி!
நல்ல விளைவென்று
　　நம்பிடச் சொன்னான்?
நாசமாய்ப் போகிட
　　யார்தான் சொன்னான்?
எல்லைக் கமக்காரன்
　　ஏற்றியே சொல்லி
இம்முறை தன்னிலை
　　ஏமாற்ற மென்றான்
இல்லவே இல்லை
　　எல்லாம் பொய்யே!
அன்னவ னுக்கே
　　நல்ல விளைச்சல்
ஐயகோ பொய்யினை
　　அள்ளி விதைத்தான்
என்னிலை தான்வரும்
　　ஏமாற்ற மையா!
கல்லு விளையுது
　　புல்லு விளையுது
காக்கொத்து நெல்லையும்
　　காணவே யில்லை
அல்லற் படுகையில்
　　எல்லைக் கமக்காரன்



சொல்லுவ தெல்லாம்
　　பொய்யே! பொய்யே!
பொய்விளை வாகியே
　　பொன் பொரு ளில்லைப்
போன மழையையும்
　　காணவே யில்லை
மெய்விளை வாகட்டும்
　　மேதினி மீதே!
வேண்டிய மட்டும்
　　விதைநெல்லுத் தாறோம்.

# ஈரடிக் குறளைப் பார்


இம்மையில் மறுமை காட்டும்
ஈரடிக் குறளைப் பாரீர்
செம்மையாய் மனிதர் வாழச்
சிறந்திடு அறமும் சீரும்
வெம்மைதீர் பொறையும் மேன்மை
வீரமும் விளங்கும் காதல்
உண்மையில் உயர்வும் காணீர்
உட்பொருள் உணர்ந்து பாரீர்

இறைவனை எவர்க்கும் மேலாய்
ஈரடிக் குறளில் ஏத்தி
மறைதனை வகுத்த வள்ளல்
மாந்தர்வாழ் வழியைக் காட்டும்
நிறைதனை நேர்மை தன்னை
நீதியாய் அரசு செய்யும்
முறைதனைக் குறளில் காட்டி
முதல்வனாய் உலகில் நின்றான்

கற்றதன் பயனை நோக்கிற்
கடவுளை வணங்கு என்றான்
சுற்றத்தில் சுவர்க்கம் காணில்
தூய்மையாய் வாழு என்றான்
நற்றவம் வேள்வி மல்கில்
நாடுநல் லறத்தை என்றான்
கொற்றவன் குறளின் வள்ளு
கூற்றினைக் கொண்டு வாழ்வீர்.



வள்ளுவன் பெருமை போற்றில்
வகுத்தநற் குறளைப் பேணீர்
உள்ளுறும் கருத்தை நண்ணி
உவப்புடன் வாழ்வை ஊன்றி
தெள்ளரும் ஞான மெய்த்
திகழுவீர் இல்வாழ் வொன்றி
கொள்ளுவீர் குறளின் கூற்றை
குறைவிலா துலகில் வாழி!



## ஞாயிறு ஓலம்

உதித்திடும் போது என்னை
உவப்புடன் மலர்கொண் டேத்தி
மதிப்புடன் மக்கள் வாழ்ந்த
வைகறைப் பொழுதை நீக்கி
விதிப்படி நாளொன் றெண்ண
மேல்நோக்கி விரையும் வேகக்
கதிர்ப்படிந்(து) தவிக்கும் மாந்தர்
கடிந்துமே உரைப்பர் காணீர்

வளம்பொலி வையங் காண
மழையோனுக் குதவவேண்டும்
தழையவிழ்ந் திதழ்கள் மீழத்
தாமரைக் குதவ வேண்டும்
உழுதெழும் பயிர்கள் ஓங்க
ஒளியினைப் பரப்ப வேண்டும்
தொழுதெழும் மக்கள் தம்மைச்
சுட்டிடில் தூற்று வாரே

வாரத்தின் முதன்நா ளென்பர்
மதத்தினர் ஞாயி றென்பர்
நேரத்தைக் குறித்துக் காட்டும்
நிர்ணயப் பொருளாய்க் கொள்வர்
தூரத்தி லிருக்கு மென்றன்
சுடரொளி பட்டுச் சுட்டால்
வீரத்தின் வாயின் வென்றோர்
வீண்மொழி புகழு வாரே



## ஐக்கியங்கள் மேலோங்குமே !

பெண் :

ஆணோடு பெண்ணைச் சேர்ப்பதற் கேபெரும்
அல்லோல கல்லோலமே - பெரும்
ஆடம்ப ரம்வேண்டுமே - நல்ல
காணிபொருள் வீடுநகை காசுகல்வி கட்டழகும்
கட்டுப்பா டும்வேண்டுமாம் - அன்பைச்
சொட்டும் குணம்வேண்டுமாம்

ஆண் :

சீதனத்தி னோடுகல்வி சேர்ந்திருக்கும் பெண்ணுக்குச்
சீரான ஆண்வேண்டுமே - நல்ல
சீரான ஆண்வேண்டுமே!
மாதமாதம் சம்பளத்தை வாங்குகின்ற உத்தியோக
மன்னவனை நாடவேண்டுமாம் - நல்ல
மன்னவனை நாட வேண்டுமாம்

பெண் :

கண்ணோடு கண்ணைச் சேர்த்துவிட் டால்வேறு
காசுகாணி தேவையில்லையே - ஏட்டுக்
கல்வியதும் தேவையில்லையே - நல்ல
பெண்ணாளும் நாற்குணம் எந்நாளும் இருந்திடில்
பேறாகும் வாழ்வினுக்கே! - பெரும்
பேறாகும் வாழ்வினுக்கே!

ஆண் :

திண்மையுள மற்றவரின் கண்வழிசேர் காதலது
தீமைதனைச் சேர்த்துவிடுமே - தினம்
திண்டாட்டப் படவேண்டுமே - நல்ல
உண்மையுள முற்றவரின் கண்வழிசேர் காதலுக்கும்
ஊறுபல காத்திருக்குமே - தினம்
ஊறுபல காத்திருக்குமே!

பெண் :

சாதிமத பேதமது காதலுக்குள் ளேயிருப்பின்
சச்சரவை உண்டுபண்ணுமே - கொடும்
சச்சரவை உண்டுபண்ணுமே - இந்த
வேதனையி னாலேயுண்மைக் காதலர்கள் வாழ்வுமூல
வேரோடு வீழ்ந்துவிடுமே - வாழ்வு
வேரோடு வீழ்ந்துவிடுமே!

ஆண்:

அந்தஸ்தை நோக்காமல் அன்புதனைச் சீர்தூக்கின்
ஐக்கியங்கள் மேலோங்குமே - வாழ்வில்
ஐக்கியங்கள் மேலோங்குமே - காதல்
சந்தைச் சரக்கு அல்ல சிந்தித் திறங்கிநிதம்
சந்தோஷ மாகவாழுவோம் - தினம்
சந்தோஷ மாகவாழுவோம்.



# உளப்பண்பாடே உறுதுணையாகும்

ஒன்றிப் பிறப்பது உடலும் உயிரும்
ஒன்றுக் கொன்று உரிமையும் உறவும்
இன்றி யமையாத தன்மையைப் போலும்
இன்னும் உரிமைகள் இணைந்தே கொள்ளும்

பெற்றோ ருரிமை பிறவிக ளுரிமை
பேணும் தாரம் பிள்ளைக ளுரிமை
பற்றால் பற்பல உரிமைகள் பரவும்
பயன்பா டதனாற் பாதைகள் விரியும்

கற்றுத் தெளிந்தால் அறிவுகள் விரியும்
கற்பனைச் செறிவால் காரியம் மிளிரும்
முற்றிப் பழுத்தால் ஞானம் சொரியும்
மோட்ச நிலைக்கவை உரிமையு மாகும்

உரிமையும் உறவும் ஒருப்படு தற்கு
உளப்பண் பாடே உறுதுணை யாகும்
பெருமையும் சிறுமையும் பேணா திறப்பின்
பேரன் பதனால் பெருகிடும் உரிமை

சிறப்புரி மைபல செயலாற் சேரும்
சிந்தனா சக்தியே திறவுகோ லாகும்
அறப்பணி யழகே ஆண்டவன் உரிமை
அழியாச் சொத்தென அனுதினம் மிளிரும்

# பாரெலாம் பேற்றிடும் பாரதியே!

பாரத புண்ணிய பூமியிலே தமிழ்ப்
பாவலனே எங்கள் பாரதியே - அன்று
காரிருள் மேவிய நாட்டினுக் கேநல்ல
பேரொளி எற்றிய பூபதியே!

சீருடன் எங்கள் செந்தமி ழோங்கிடச்
செய்யுள் புனைந்தஎம் பாரதியே - அன்று
வீறுடனே சொந்த நாட்டின் சுதந்திரம்
வேண்டி நின்றானெங்கள் மேலவனே!

உள்ளத்தில் எழுந்த நல்ல உணர்ச்சியை
ஊக்கப் படுத்திய பாரதியே - அன்று
அள்ளிச் சொரிந்தனன் நற்கவி யேயின்று
ஆளப்படுந் தமிழ் இலக்கியமே!

கன்னித் தமிழ்மலர்க் காவினி லேகவி
கண்ட புதுமைகள் எத்தனையோ - அவை
நின்றே இலங்குமே லக்கியமே என்றும்
நேச மிகுந்திடும் நித்திலமே!

பாரதி உள்ளத்தின் பக்குவ மேயவன்
பாடல்கள் காட்டுது பண்ணுடனே - அன்று
பாரத நாட்டினைப் போற்றின னேயின்று
பாரெலாம் போற்றிடும் பாரதியே!



# வாழ்க்கையின் பூரணம்

கல்வி :

அள்ளிக் கொடுத்திட
நாளும் குறையாத ஐஸ்வரியம்
பிள்ளைப் பிராயத்தில்
உள்ளத் துறைந்திடும் பேர்நிதியம்
பள்ளித் தலத்தினிற்
கொள்ளத் தகுந்தநற் பால்மதியம்
விள்ளத் தகும்பெரும்
கல்விப் பொருளென்று வேண்டுவமே!

செல்வம் :

பயிற்சிப் படிதனில்
பாங்கார்ந்த பக்திப் பரவசமும்
முயற்சிப் பிடிதனில்
முன்னேறிச் செல்லும் முறைநெறியும்
உயர்ச்சிக் கொடிதனில்
உண்மையும் தான ஒழுக்கமதும்
நயக்கப் படுமெனில்
நாடறி செல்வச்சீர் நாளுளதே!

வீரம் :

மானத்தைக் காக்கும்
மனவலியும், மாற்றார் மடக்குகின்ற
ஈனத்தைப் போக்கும்
எழுநிலையும், எல்லாம் எனதுவெனும்
பீனத்தைத் தேய்க்கும்
பிரசண்ட மேன்மையும், பேசுமவ
தானத்தைப் பேணலும்
சக்திசேர் வீரத்தின் தன்மையதே!

பூரணம் :

கவினார்ந்த கல்வியும்
காப்பார்ந்த செல்வமும் கண்களாயும்
சவியார்ந்த வீரமும்
தன்மானத் தன்மையும் கைகளாயும்
சுவையார்ந்த சொல்வாய்மை
தூய்மையும் சேவைக்கண் கால்களாயும்
புவியார்ந்து கொள்வதே
பொற்பார்ந்த வாழ்க்கையின் பூரணமே!

கவிஞர் ஐயாத்துரை
கவிதைகள்

## அமரர்
## "மூதறிஞர்"
## அரியாலையூர்
# கவிஞர் வே. ஜயாத்துரை



அமரர்
அரியாலையூர் கவிஞர்
வே. ஜயாத்துரை

ஈழத்துத் தமிழ் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர். யாழ் இலக்கிய வட்டத்தின் மூத்த உறுப்பினராக விளங்கியவர். மரபுவழிக்கவிஞர். கவிஞராக விளங்கியதோடு நாடகவுலகில் நடிப்பு, நெறியாள்கை, ஒப்பனை ஆகிய துறைகளில் சிறந்து விளங்கினார். நாடகப் பாடல்கள் பலவற்றையும் யாத்தளித்துள்ளார். மேலும் கவிஞர் வே.ஜயாத்துரை அவர்களின் கவியரங்கக் கவிதைகள், கேட்போர், பார்ப்போர் அனைவரையும் கவர்ந்தன் கவிஞரின் பல கவிதைகளடங்கிய தொகுதிகளாக வெள்ளைக் கமலம், வளர் தெங்கு, என்பன வெளிவந்துள்ளன. கலைமகளுக்கென அரியாலையில் கோயில் அமைத்து கலையாகவே தன் வாழ்வை நிறைவு செய்து கொண்டவர். பரிசில்கள் பலவற்றைக் கவிதைக்காகப் பெற்றுக் கொணடவர். 1923ம் ஆண்டு பிறந்த கவிஞர் வே.ஜயாத்துரை தனது 72 வயதில் அமரராகினார். காலத்தில் சாகாத கனதியான கவிதைகளைத் தந்த கவிஞர் வே.ஜயாத்துரையால் தமிழுலகு பெருமை கொள்கிறது.

- செங்கை ஆழியான் -

Cover Printed GURU PRINTERS & NG.